TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

மே 2025

தீபம் 13 சுடர் 12

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து இறையாசீர்

*அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,*



## வணக்கத்திற்குரிய அன்னை

மே மாதம் என்றாலே அன்னை மரியாளின் மாதம். இதை சிறப்பாய் கொண்டாட திருஅவை நம்மை அன்போடு அழைக்கின்றது. இம்மாதத்தில் அன்னை மரியாளின் பக்தியானது உலகமெங்கிலும் பக்தி பாசத்துடனும், நம்பிக்கையுடனும் உற்சாகமாக, கொண்டாடப்பட்டு வருகிறது. இக்கொண்டாட்டம் ஒவ்வொரு பங்கிலும் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் செபமாலையுடன் கூடிய திருப்பலியும், தேர்பவனியும், சிறப்பு மறையுறைகளும் அன்னை மரியாளின் புதுமைகளை நினைவுக் கூர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னை மரியாளை குடும்பமாகவும், அன்பியங்களாகவும், தங்களின் பங்குகளில் வரவேற்று அவரின் புகழ்பாடி அவரை வணங்கி, செபித்து, சிறப்பு செய்ய இவ்வணக்க மாதத்தை நாம் வரவேற்று சிறப்பு செய்வோம்.

பாரம்பரியமிக்க இவ்வணக்கமாதா பக்தி முயற்சி, 13ம் நூற்றாண்டில் துவங்கியது. பொதுவாக தொடக்கக் காலத்தில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்களல்லாதவர்களால் கொண்டாடப்பட்ட ஒரு பொது விழாவை, கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் இப்பொதுவிழாவைத் தழுவிக்கொண்டு இந்த பொது கொண்டாட்டத்தை மரியன்னையின் வணக்க மாதமாகச் சிறப்பித்துக், கொண்டாடி வந்தார்கள். 18ம் நூற்றாண்டில் இந்த வணக்கமாதா கொண்டாட்டம், குறிப்பாக இயேசு சபையினரிடையே மிகவும் புகழ்பெற்று விளங்கியது. பிறகு இந்த பக்தி கொண்டாட்டம் உலகமெங்கும் பரவியது.

வணக்க மாதத்தில் மரியன்னை பக்தி முயற்சி பல திருத்தந்தையர்களால் ஊக்குவிக்கப்பட்டது. திருத்தந்தை பதினோராம் பத்திநாதர், திருத்தந்தை ஆறாம் சின்னப்பர், மற்றும் புனித இரண்டாம் ஜான்பால் போன்றோர்களால் இப்பக்தி முயற்சி புகழ்பெற்று மிகுந்த மகிழ்வுடனும், நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும், மரியன்னையை புகழ்ந்துப்பாடி, செபித்து, அவரை பெருமைப்படுத்தி, வணங்கி கொண்டாடியது.

நமது அன்னை மரியாளின் எடுத்துக்காட்டான வாழ்வும், அவரின் அர்ப்பண வழிகாட்டுதலும், சிறப்பாக அவர் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து, தூய ஆவியின் வல்லமையால் கடவுளின் சித்தப்படி நடந்து நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும், தூண்டுதலாகவும் இருக்கின்றார். மரியன்னையின் வணக்க மாதா பக்தி முயற்சி குறிப்பாக பாஸ்கா காலத்திலும், தூய ஆவியாரின் வருகை காலத்திலும் அதிலும் சிறப்பாக திருமுழுக்கு, உறுதிபூசுதல், நற்கருணை போன்ற அருட்சாதனங்களால் மரியன்னையின் பக்தி சிறப்பானதாக உணர்ந்துக் கொண்டாடப்படுகிறது. எனவே, இவ்வன்னைக்கு செபமாலை செய்து, பாடல்பாடி, தேர்பவனியில் கலந்துக்கொண்டு, திருப்பலியில் பங்கேற்று இம்மாதத்தை வணக்கத்துடன் கொண்டாட திருஅவை நம்மை அழைக்கிறது.

இறுதியாக திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் சொல்வதுபோல வணக்கமாதம் அருளின் மாதம், கடவுளின் அருட்கொடைகளையும், இரக்கத்தையும், அன்பையும் கொண்டாடும் மாதம். மரியன்னையை நாம் கொண்டாடுவதிலும் அவள் புகழ் பாடுவதிலும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை கொண்டாடி, அவர் புகழ்பாடி நம் அன்னையை மகிழ்விப்போம்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


01.05.2025 தொழிலாளர் புனித யோசேப்பு - திருப்பலி 02

03.05.2025 புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு திருத்தூதர் - திருப்பலி 03

04.05.2025 பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு - திருப்பலி 04

06.05.2025 புனித தோமினிக் சாவியோ - திருப்பலி 05

11.05.2025 பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு, இறையழைத்தல் ஞாயிறு திருப்பலி 06

13.05.2025 புனித மரிய மசரெல்லோ - திருப்பலி 08

14.05.2025 புனித மத்தியா திருத்தூதர் விழா - திருப்பலி 09

16.05.2025 அருளாளர் அலோசியஸ் ஓரியோனே - திருப்பலி 10

18.05.2025 பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு - திருப்பலி 11

22.05.2025 காசியா நகர்ப் புனித ரீத்தா - திருப்பலி 13

24.05.2025 கிறிஸ்தவர்களின் சகாய அன்னை விழா - திருப்பலி 14

25.05.2025 பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு - திருப்பலி 15

29.05.2025 புனித ஜோசப் கொவால்ஸ்கி - திருப்பலி 16

31.05.2025 புனித கன்னிமரியா எலிசபெத்தை சந்தித்தல் - திருப்பலி 17


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


புனித தோமினிக்கா மசரெல்லோவின் வாழ்க்கை வரலாறு 19

கிறிஸ்தவர்களின் சகாய அன்னை நமக்குத் தரும் பாடம் 20

விடுமுறை விவிலியப் பள்ளி - ஒரு கண்ணோட்டம் 22

திருஅவைச் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.05.2025 தொழிலாளர் புனித யோசேப்பு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

"செய்யும் தொழிலே தெய்வம், அந்த திறமைதான் நமது செல்வம், கையும் காலும் தான் உதவி, கடமைதான் நமது பதவி என்ற அழகான பாடலுக்கு முன்மாதிரியானவர் புனித சூசையப்பர். தன்னுடைய கடின உழைப்பால் திருக்குடும்பமான அன்னை மரியாளையும், இயேசுவையும் காத்து வழிநடத்திய உழைப்பின் பெருமையை இயேசுவிற்கு கற்றுத் தந்தவர் இவரே. உழைப்பை பரிசுத்தப்படுத்தவும், கௌரவிக்கவும் விண்ணுலக பாதுகாவலராக புனித சூசையப்பரை நியமித்த 12ம் பத்திநாதர் என்னும் திருத்தந்தை 1955ல் இவ்விழாவை ஏற்படுத்தினார்.

இன்றைய வாசகத்தின் பொருள் "கடவுள் இவ்வுலகை படைத்தார் என்பது" அவ்வகையில் அவரும் ஒரு தொழிலாளியாகவே தோன்றுகின்றார். உழைக்கும் மக்கள் கடவுள் பணியிலே பங்கு கொள்கிறார்கள். இயேசு தொழுகைக் கூடத்தில் கற்பித்தப்போது அவரின் ஞானத்தைக் கண்டு "இவர் தச்சரின் மகன் அல்லவா" என்றும் அதிசயிக்கிறார்கள். உழைப்பவர் இல்லாமல் இவ்வுலகம் இல்லை .நாம் வாழும் சமூகத்தில் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லாமலும், உயர்ந்த தொழில், தாழ்ந்த தொழில் என்று இனம் பிரிக்கப்பட்டு துன்பப்படும் நிலையை காண்கிறோம். எல்லாத் தொழில்களும் இன்றியமையாததுதான் என்று கருதப்படும் நிலை வரவேண்டும். ஆகவே இன்றைய தினத்தில் தொழிலாளர்களுக்காகவும், அவர்களின் உழைப்புக்காகவும், சிறப்பாக செபித்து, வாழ்த்துக்கூறி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. படைப்பின் நாயகனே இறைவா, உம்மால் படைக்கப்பட்ட இவ்வுலக திருஅவையை காத்துவரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தத்தம் கடமைகளை நினைவுக்கூர்ந்து, ஒளிரும் கருவியாக உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றிட தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் நாயகனே இறைவா, உலகை ஆட்சிசெய்யும் தலைவர்கள் உம்மில் நம்பிக்கை கொண்டவர்களாக, உம் மக்களின் தேவைகளை உணர்ந்து, நல்வழியில் நடத்திடவும், வாழ்வாதாரம் தழைக்க வேண்டிய நல்லுள்ளத்தோடு இவர்கள் நேர்மையோடு நாளும் நடந்திட வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. உள்ளத்தின் ஊற்றே எம் இறைவா, உலகிலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்காகவும் மன்றாடுகிறோம். தங்களின் உழைப்பே

உயர்வு என்ற இலக்கோடு தங்களின் வாழ்வில் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வரும் இவர்கள், தங்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைத்திட நல்விளைச்சலை அளித்து வாழ்வில் மகிழ்வினைக் காண வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 03.05.2025 புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமானவர்களே, திருத்தூதர் பிலிப்பு கலிலேயா பெத்சாயிதாவில் தோன்றியவர். இறையழைத்தலுக்கு உடனே செவிமடுத்து, தனது நண்பர் நத்தனேயலிடமும் தெரிவித்து திறந்த உள்ளத்தோடு ஐயமின்றி வந்துபாரும் என அழைக்கின்றார். மேலும் கிரேக்கர் எருசலேம் வந்து பிலிப்புவிடம் "ஐயா இயேசுவைக் காண விரும்புகிறோம் என கேட்டபோது அவர் அவர்களை அழைத்துச் செல்கிறார்". தூய ஆவியார் வருகைக்குப் பிறகு தமது பணியில் ஈடுபட்டு பிரிஜியாவில் இயராப்போலிசு என்ற நகரில் சிலுவைச் சாவை ஏற்றார் என்றும், பல உயர்ந்த பண்புகளைக் கொண்டவர் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

திருத்தூதர் யாக்கோபு, யூதா, ததேயுவின் சகோதரர். இயேசுவின் உறவினர் மற்றும் அல்பேயுவின் மகனுமாவார். எருசலேம் நகரின் முதல் ஆயராக விளங்கியவர் (திப. 21:18). யூத மரபுகளை காத்து எருசலேம் ஆலயத்தின் திருப்பணிகளை திறம்பட நடத்தியவர். புனித பவுல் மனந்திரும்புதலுக்குப் பிறகு அவரது போதனைகளை சந்தேகத்தோடு பார்த்த மக்களுக்கு பவுலைப் பற்றி அறிவிக்க அவரை இருகரம் விரித்து வரவேற்றவர். கடவுளிடம் திரும்புகிறவர்களுக்கு பிற இனத்தாருக்கு தொல்லைக் கொடுக்கக் கூடாது என கூறியவர் (திப.15:20). இவர் ஒரு திருமுகமும் எழுதியுள்ளார். இவரது திருமகம் பற்றி புனித 23ம் யோவான் திருத்தந்தை தமது தியானக் குறிப்பேட்டில் (நவ.23,1948ல்) குறிப்பிட்டுள்ளார். இத்திருமுகம் துறவிகளுக்கும், திருப்பணி புரிவோர்க்கும், பொதுநிலையினருக்கும் மாபெரும் செல்வம். வரலாற்று ஆசிரியரான யுசேபியஸ் இவரை நீதிமான் என்றுரைத்தார். பிலிப்பு யாக்கோபுவின் இறைநம்பிக்கையை விலை மதிப்பற்ற தங்கச் சுரங்கம் என்று கூறினார். எனவே ஒவ்வொருவரும் இவர்களின் வாழ்வை மனதில் பதித்து உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்துலகின் ஆண்டவரே, புனித பிலிப்பு, யாக்கோபு போன்று உலகிற்கு உமது நற்செய்தியை உலகெங்கும் பரவ அயராமல் உழைக்கும் கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீ இளைஞனாய் இருக்கும்போதே கடவுளைத் தேடு என மொழிந்த இறைவா, கணிணி உலகத்தில் வாழும் எம் இளைஞர்கள் இளம் பெண்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் தங்கள் வாழ்வில் நல்லது எது? கெட்டது எது என உய்த்துணர வேண்டி இவ்விரு புனிதர்கள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளிச்சுடரே எம் இறைவா, நாங்கள் பலவிதமான எதிர்பார்ப்புகளோடும், ஏக்கங்களோடும், துன்ப துயரங்களோடும் வந்திருக்கும் எங்கள்மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளவும், இவ்வுலகத் தீமைகள், கடன் தொல்லைகள், வறுமை, பிணி போன்ற துன்பங்களிலிருந்து விடுதலைப்பெற்று புதுவாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 04.05.2025 பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. திப. 5: 27-32.40-41 II. திவெ. 5: 11-14 யோவா. 21: 1-19

அன்பார்ந்த சகோதரிகளே, இயேசுவின் உயிர்ப்பின் மையச்செய்தி "அமைதி" இயேசு இறந்துவிட்டார், எல்லாம் இழந்துவிட்டோம் என்ற ஏமாற்றத்தோடு வாழ்ந்த சீடர்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு தந்தது அமைதி. நமக்கும் இன்று அமைதி தரும் இறைவார்த்தைகளை வார்த்தை வழிபாடு வழியாக இயேசு நமக்குத் தருகிறார். இயேசு உயிர்த்தப் பின்பு பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்த திருத்தூதர்களை அவர்களுக்கு காட்சியின் மூலம் தேற்றுகிறார். எனினும் தூய ஆவியார் வந்ததும் அவர்கள் துணிவு பெறுகிறார்கள். இயேசுவை மும்முறை மறுதலித்த பேதுரு தைரியமாக ஆட்சியாளர்கள்முன் இயேசுவை அறிவிக்கிறார். இதனை இன்றைய முதல் வாசகத்தில் காண்கிறோம். பேரரசை கடவுளாக வணங்கும் மக்களுக்கு, பேரரசுக்கு மேலான ராஜாதி, ராஜா ஆண்டவராகிய கடவுள் அரியணையில் வீற்றிருப்பதைப் பார்க்கிறோம். அவரது மகன் இயேசு கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியென அறிமுகப்படுத்துகிறார். அவர் போராடும் ஆட்டுக்குட்டியென இந்நூலின் ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார்.

நற்செய்தியில் இயேசு இறந்த பின்பு, சீடர்கள் மீண்டும் மீன்பிடிக்கச் செல்கிறார்கள். அச்சமயத்தில் இயேசு தன் சீடர்களுக்கு மூன்றாம் முறையாக காட்சிக் கொடுக்கிறார். இந்தக் காட்சியில் பேதுருவிடம், "நீ என்னை அன்பு செய்கிறாயா?" என்று மூன்று முறை கேட்கிறார். இயேசுவின் அன்பிற்காய் எல்லாவற்றையும் இழக்க பேதுரு முடிவு செய்ததினால் இயேசுவிடம், "ஆண்டவரே, நான் உம்மை அன்புச் செய்கிறேன்" என்றார். இயேசு தன் உடல், உயிர், வாழ்வு முழுவதையும் தன் தந்தையின் அன்பிற்காய் இழந்தார். இந்த இழப்பைத்தான், பேதுரு தனது மூன்றாவது பதிவில் வெளிப்படுத்துகிறார். நாமும் உயிர்த்த இயேசுவை உணர்ந்து அனுபவமாக்க வேண்டுமானால் அவரது அன்பைச்

சுவைக்கின்றவர்களாக இருக்க வேண்டும். ஒரு சீடரின் இதயம் இயேசுவின் இதயத்திற்கு இணைந்திருக்க வேண்டும், இவ்விதய இணைப்பிற்காக இத்திருப்பலியில் பக்தியோடு பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உமது பேரன்பால் உலகை நிறைத்தவரே, எம் திருஅவையை வழிநடத்துகின்ற திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் இறையச்சம், அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல் ஆகிய பண்புகளை உள்வாங்கி இறையன்பிலும், பிறரன்பிலும் சிறந்து விளங்க உமது அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்கள் கற்பாறையும் மீட்பருமான ஆண்டவரே, நாட்டையாளுகின்ற தலைவர்கள் நீதியை நிலை நாட்டுகின்றவர்களாகவும், சாதி, சமய, இனவேறுபாடுகளைக் களைந்து, ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, மக்களை நீதியோடும், நேர்மையோடும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியின் அருட்சுடரே எம் இறைவா, நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் நோயினாலும், முதுமையினாலும், தனிமையில் தவிப்போர், வேலையில்லாத வறுமை, வாழ்வில் ஏமாற்றம், தோல்வி, கடன்சுமை போன்ற பலதரப்பட்ட காரணங்களால் அமைதியையிழந்து வாழும் மக்களுக்கு உமது உயிர்ப்பின் நிகழ்வில் அவர்களின் வாழ்வும் உயிர்பெற தேவையான ஆற்றலை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

4. உமது உயிர்ப்பின் உண்மையை சீடர்களுக்கு வெளிப்படுத்திய எம் இறைவா, எம் வாழ்க்கையில் ஏற்படும் குடும்பப் பிரச்சனைகள், பணியிடத்தில், அரசியலில், சமுதாயத்தில் ஏற்படும் பல இடர்களிலிருந்து நாங்கள் சிக்கித் தவிக்கின்ற தருணங்களில் நீர் எங்களோடிருந்து வழிநடத்த வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 06.05.2025 புனித தோமினிக் சாவியோ திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

தோமினிக் சாவியோ தன் பெற்றோரைப் போலவே இறைப்பற்று மிகுந்தவராக வளர்ந்தவர். நான்கு வயதிலேயே காலை மாலை, உணவுக்கு முன், பின் கூறப்படும் செபங்கள், மூவேளைச் செபம் முதலியவைகளை நன்கு கற்றிருந்தார். நற்கருணை அருட்சாதனத்தைப் பற்றிய அனைத்து மறை உண்மைகளையும் கற்றுத் தெளிவுற்றிருந்தார். எனவே விதிமுறைகளைச் சற்றுத் தளர்த்தி அவருக்கு முதல் நற்கருணை விருந்தை வழங்கிட பங்கு தந்தை தீர்மானித்தார். இயேசுவும் அன்னை மரியாவும் எனது நண்பர்கள் மற்றும் இறக்க நேரிட்டாலும் பாவத்தைச் செய்யமாட்டேன்” என்று சில

தீர்மானங்களை எழுதிவைத்துக் கொண்டு தினமும் வாசித்து வந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அந்நாட்களில் படிப்பிலும் சிறந்து விளங்கினார் தோமினிக். 1857 மார்ச் 9ம் நாள் மாலையில் தோமினிக் தமது ஆவியை இறைவனிடம் ஒப்படைத்தார். இத்தாலியில் வாழ்ந்த சார்லஸ் சாவியோ மற்றும் பிரிஜித்தம்மாள் தம்பதியினருக்கு 1842 ஏப்ரல் 2ம் நாள் கியேரி நகருக்கு அருகில் ரீவா என்னும் கிராமத்தில் பிறந்த தோமினிக் சாவியோ, 15 வயதிலேயே புனிதத்தன்மையின் உச்சியை அடைந்த தோமினிக் சாவியோவிற்கு திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1950 மார்ச் 5ம் நாள் அருளாளர் பட்டமும் 1954 ஜுன் 12ம் நாள் புனிதர் பட்டமும் வழங்கினார். இன்றைய உலகில் நம் குழந்தைகளும் இவரின் வாழ்வைப் பின்பற்றி வாழ இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருதந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் இருபால் துறவறத்தார் அனைவரையும் உடனிருந்து பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. சிறுபிள்ளைகளை என்னிடம் விரவிடுங்கள் என்றவரே, எங்கள் பங்கின் சிறு பிள்ளைகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் புனித தோமினிக் சாவியோவின் வாழ்வைப் பின்பற்றி நாளும் நடந்து உமக்கேற்ற பாதையில் தங்களை அர்ப்பணிக்கும் நல்லுள்ளத்தை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியரே எம் இறைவா, எங்களின் பிள்ளைகளை இறை பக்தியிலும், ஞானத்திலும் வளர்த்து, உமக்கு கொடுக்கப்பட்ட பணியினைச் செய்யும் நல்ல ஞானமுள்ள, குழந்தைகளாக நாங்கள் வளர்த்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 11.05.2025 பாஸ்கா காலம், இறையறழைத்தல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. திப. 13: 14,43-52 II. திவெ. 7: 9,14-17 யோவா. 10: 27-30

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இவ்வுலகம் படைக்கும்பொழுது தனிமையாக யாரையும் படைக்கவில்லை. ஆணும் பெண்ணுமாக படைத்து அவர்கள் வழியாக பலுகிப் பெருகி உலகம் நிரம்பியது.மனிதன் தங்களின் சுயநலத்தால் இறைவனைவிட்டுவிலகினான். ஆனால் அவர்களை தன்னோடு இணைத்துக்கொள்ள தன் பராமரிப்பில் பாதுகாக்கவே இறைவன் விரும்பினார். அவர்களை மீட்க தன் மகனையே பலியாக அனுப்பினார். உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினதார்க்கும் ஒளியாக ஏற்படுத்துவேன். அவ்வொளியில் அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள். அவர்கள்

எல்லா நாட்டையும், குலத்தையும், மக்களினத்தையும், மொழியையும் சார்ந்தவர்கள் என்பதை உணர்த்தும் வகையில் இன்றைய வாசகங்கள் அமைந்துள்ளது. மனுமகன் ஒருவருக்காகவோ ஒரு இனத்திற்காகவோ அனுப்பப்படவில்லை. ஒட்டுமொத்த மனுக்குலமும் மீட்கவே விரும்பினார்.

ஆனால் இறைவார்த்தையையும், இறையன்பையும் யூதர்கள் ஏற்க மறுத்து புறம்பே தள்ளும்பொழுது அவர்களின் ஆசிர்வாதம் புறவினத்தாருக்கு கொடுக்கப்படுகின்றது. ஆனால் இறைவனின் விருப்பம் ஒவ்வொருவரும் மீட்படைய வேண்டும் என்று கூறுகிறார். நம் மீட்பு இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே நிகழும், வேறு யாராலும் நமக்கு மீட்பில்லை. அதனால்தான் இயேசு நேர்மையாளர்களைத் தேடிவரவில்லை, பாவிகளையே தேடிவந்தார். தாகமுள்ளவனுக்கே நீர் நிலைகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு வாழ்வின் இன்பத்தை உணர்ந்தவர்களுக்கே இறையரசில் பங்கு பெற முடியும் என்பதை உணர்ந்தவர்களாக இத்திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான எம் இறைவா, உலகம் முழுவதும் மீட்படைவதற்காக நீர் தேர்ந்தெடுத்த எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உமது உயிர்ப்பில் தங்களின் வாழ்வில் புதுஒளி பெற்றவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உமது சிறகுகளால் எங்களைப் பாதுகாப்பவரே, நீர் எங்களுக்காக உயிரைக்கொடுத்து காத்தவரே, நாங்கள் மனம்போன போக்கில் சென்று வாழ்வை சீரழித்துக்கொண்டிருக்கின்ற தருணத்திற்காக மனம் வருந்துகிறோம். எங்களிடையே சாதி, மதம், நிறம், இனம் என்ற பாகுபாடுகளைக் களைந்து அனைவரும் ஒற்றுமையோடு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. நல்லாயனாம் எம் இறைவா, நிலையில்லா இவ்வுலகில் இளையத் தலைமுறையினர் உமது மாய உலகின் வழியில் செல்லாமல், உமது இறையாட்சிப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு தங்களின் வாழ்வை அர்ப்பணிக்க நல்ல ஞானத்தையும், தூய ஆவியாரின் அருட்கொடைகளையும் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணையின் கடலே எம் இறைவா, படித்துக்கொண்டிருக்கின்ற மாணவ மாணவியரை நீர் ஆசீர்வதியும். இவர்கள் எழுதியிருக்கின்ற எழுதுகின்ற தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று தேர்வில் வெற்றிப்பெறவும், அதற்கேற்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.05.2025 புனித மரிய மசரெல்லோ திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித மரிய தோமினிக்கா மசரெல்லோ அவர்களின் திருப்பலியில் கலந்துக்கொள்ள வந்திருக்கிறோம். அவரது வாழ்க்கையை பார்க்கலாம். பிறப்பிலிருந்து முதல் 13ஆண்டுகள் தன் பெற்றோருடனும் தன் ஆன்ம இயக்குநர் தந்தை டொமினிக்கோ பெஸ்டாரினோ அவர்களுடனும் இணைந்து இறை நம்பிக்கையில் முதிர்ச்சி பெற பயணித்ததை பார்க்கமுடிகிறது. இரண்டாவது அடுத்த 10 ஆண்டுகளில் கடுமையாக உடல்நல குறைவுகளை சந்தித்தார். எனினும் நற்கருணை அருட்சாதனம் பெற்றதுமுதல் பங்குதளத்தில் நற்பணிகளில் பங்குகொண்டார். கற்பு என்னும் புண்ணியத்தை கடைப் பிடித்து, முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்க முடிவெடுத்தார். அமல அன்னை சகோதரிகள் என்ற அமைப்பில் இணைந்து இறை மற்றும் பிறரன்பு பணியாற்றினார். மூன்றாவது பகுதியில் 12 ஆண்டுகளில் இறைவனது திட்டத்திற்கு ஏற்ப தன்னை தயார்ப்படுத்திக் கொண்டார்.

தொன் போஸ்கோவின் சலேசிய சபைப்பற்றி அறிந்துகொண்டார். சலேசிய சபையினர் ஆண்களுக்கான இளையோர் பணி செய்வதுபோல இளம் பெண்களுக்கும் ஒரு தனி சபை உருவாக்கிட தொன்போஸ்கோ முயற்சி மேற்கொண்டிருப்பதை கண்டு மகிழ்ந்தார். சகாய அன்னையின் புதல்வியர் சபையின் துணை நிறுவனரானார். ஆதரவற்ற அனாதை இளம் சிறுமிகள் மற்றும் இளம் பெண்களை பராமரித்தல், கற்பித்தல், மீட்பின் பாதையிலும் தனிமனித ஆளுமை வளர்ச்சியிலும் வழிநடத்துதல் ஆகியவற்றை தம் பணியின் இலக்காக கொண்டு தொன் போஸ்கோவின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்பட்டார். தனது வாழ்நாளின் இறுதி பகுதியாக 9 ஆண்டுகள் தனது சலேசிய சகோதரிகளுக்கு ஆன்மீக உருவாக்கங்களில் தன்னுடைய தாயன்பை சேர்த்து வளர்த்தெடுத்தார். புதிய இல்லங்கள், பல நாடுகளில் சென்று மறைப்பணியாற்றுதல் என சபையை விரிவுபடுத்தினார். மே 14 1881ல் மறைந்தார், அவரது விழா மே 13ல் திருஅவை கொண்டாடுகிறது. புனித மரிய மசரெல்லோவை போன்று நாமும் நம்பிக்கையில் வேறூன்றி வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஒளியின் சுடரொளியே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தைக்கு நல்ல உடல் நலத்தைக்கொடுத்தமைக்கு உமக்கு நன்றி கூறுகின்றோம். அவ்வாறே அவரோடு இணைந்து பணிபுரியும் கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து உம் நற்செய்திப் பணியினை சிறப்பாக செய்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று கூறிய இறைவா, இந்த புனித வாரத்தில் இருக்கும் நாங்கள், வெளிவேடக்காரரைப்போல் இல்லாமல், எங்கள் வாழ்வில் இதுநாள்வரையில் செய்த அனைத்து தீமைகளிலிருந்து எங்களை விடுவித்து, உமது உயிர்ப்பில் நாங்கள் புதுவாழ்வு பெற்றவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. தீமை உங்களை நெருங்காது என்று கூறி இறைவா, அனைத்து விதமான பாவகாரியங்களையும் விடாமல் பற்றிக்கொண்டிருக்கும் எங்களை பாவச்சூழலிலிருந்து முற்றிலும் விலகி, உமக்கேற்ற சாட்சிய வாழ்வு வாழ எங்களுக்கு அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 14.05.2025 புனித மத்தியா திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று இயேசுவின் திருத்தூதரான தூய மத்தியாஸின் விழாவைச் சிறப்பிக்கின்றோம். மத்தியா என்பதற்கு "யாவேயின் கொடை" என்பது பொருள். இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்குப் பதிலாக ஒரு புதிய திருத்தூதரைத் தேர்வு செய்யும் முயற்சியில், ஏறக்குறைய 120 சகோதர சகோதரிகள் ஒரே இடத்தில் கூடியிருந்த நேரத்தில் பேதுரு அவர்கள் நடுவில் எழுந்து நின்று இயேசுவின் சீடர்களுள் யூதாசுக்குப் பதிலாகப் புதிய நபர் யாராக இருக்க வேண்டுமென்று கூறினார். "ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாய் விளங்க, அவர் நம்மிடையே செயல்பட்ட காலத்தில் நம்மோடு இருந்த ஒருவரைச் சேர்த்துக் கொள்ள நாம் கூடிவர வேண்டியது தேவையாயிற்று. யோவான் திருமுழுக்குக் கொடுத்தக்காலம் முதல் ஆண்டவர் நம்மிடமிருந்து விண்ணேற்றமடைந்த நாள்வரை அவர் நம்மோடு இருந்திருக்க வேண்டும்" என்று கூறினார். அதன்படி யோசேப்பு என்பவரும் மத்தியாஸ் என்பவரும் முன்னிறுத்தப்பட்டார்கள். சீட்டுக் குலுக்கிப் போட்டதில் அவர்களுள் இறைவனின் திட்டப்படி மத்தியாஸ் 12வது திருத்தூதராகத் தேர்வானார். காட்டு மிராண்டிகளுக்கு மத்தியில் நற்செய்தி போதித்துவந்த மத்தியா, தனது கண்கள் பறிக்கப்பட்டுப் பார்வையிழந்தார். இயேசுவின் அறிவுறுத்தலின்படி தூய அந்திரேயா அவரை மீட்டதாக "மத்தியா பணி" என்ற நூலில் தூய அந்திரேயா எழுதியுள்ளார்.

இவரது திருப்பண்டங்கள் டிரியர் நகரில் உள்ள ஆசீர்வாதப்பர் துறவு மடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இன்றைய நற்செய்தியில், "நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்" என்றும் "நீங்கள் என்னைத் தேர்ந்துக் கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துக் கொண்டேன்" என்றும் நாம் வாசிக்கின்றோம். எனவே அன்புக்குரியவர்களே, அந்த ஆசீர்வாதமான வாய்ப்பிற்காகக் காத்திருப்பதைவிட அதைத் தேடி கண்டடைய நமது

வாழ்வைத் தகுதியாக்கிக் கொள்ள, நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ளத் தொடர்ந்து இப்புனிதரின் வழியாக இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்ட அருட்பொழிவினை மனதில் கொண்டு, திருஅவையெனும் பெரிய குடும்பத்தை இறைத்திட்டத்தின்படி துடிப்புடன் நடத்திச்செல்ல அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்லாயனாம் இறைவா, மக்களையாளும் அதிகாரம் பெற்றவர்களும், வழிநடத்தும் ஆட்சியாளர்களும் மக்களை கரிசனையுடனும், நேர்மையுடனும் வழிநடத்தத் தேவையான ஆசியைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அருள்பொழியும் இறைவா, ஒவ்வொரு குடும்பமும் இறை நம்பிக்கையுள்ள குடும்பமாய் விளங்க வேண்டுமென்றும் அக்குடும்பத்தை கட்டுக்காக்கும் நல்ல பெற்றோர்களாக நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 16.05.2025 அருளாளர் அலோசியஸ் ஓரியோனே திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் சுரேஷ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் தூய லூயிஸ் ஓரியோனே அவர்களின் விழாவைச் சிறப்பிக்கின்றோம். இத்தாலியில் பிறந்தவர் தனது 14ம் வயதில் தூரினில் தொன் போஸ்கோவின் ஆரட்டரியில் சேர்ந்தார். குருவாகத் தன்னை அர்ப்பணிக்க எண்ணிய லூயிஸ் முதலில் பிரான்சிஸ்கன் துறவற சபையில் சேர்ந்தார். ஆனால் தனது உடல்நிலை காரணங்களால் அந்தச் சபையில் இருந்து வெளியேர வேண்டியதானது. அந்த சமயத்தில்தான் தொன் போஸ்கோவின் அரவணைப்பு இவருக்கு கிடைத்தது. சலேசிய குருமட வாழ்வைச் சுவைத்து வந்தவர், சலேசிய துறவியாகத் தன்னைத் தொடர்ந்து இருத்திக் கொள்ளும் எண்ணத்தை மாற்றி, அங்கிருந்தும் வெளியேறினார். பிறகு தனது சொந்த மறைமாவட்டமான தோர்தோனாவில் உள்ள குருமடத்தில் சேர்ந்து 1895ல் குருவானார். அதே நாளில் அவருடைய நண்பர்களும் துறவு வாழ்வை ஏற்க முன்வந்தனர். பின்னாளில் தொன் போஸ்கோவின் பணியில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தவர் என்ற வகையிலே, தன்னுடன் குருமாணவர்களையும் சில விருப்பமுள்ள குருக்களையும் சேர்த்துக்கொண்டு ஏழை இளையோர், ஆதரவில்லா முதியவர்கள் மற்றும் உடல்நலமில்லா மாற்றுத் திறனாளிகளுக்காகப் பணியாற்ற முடிவெடுத்தார்.

பல்வேறு இடங்களில் இவரது பணி வளர ஆரம்பித்தது. இதன் உச்சக்கட்டமாக இறைப்பராமரிப்பின் புதல்வர் சபை, அன்பின் மறைபரப்பு

கன்னியர் சபை போன்ற துறவற சபைகளையும் ஏற்படுத்தி தனது பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அவர் கட்டியெழுப்பிய மரியன்னையின் பீடத்தின் வழியாகப் பெற்று இறைவனின் வழிகாட்டுதலை உணர்ந்தார். நமது நாட்டில் 2002 முதல் இவரது சபையினர் தங்கள் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். மறைந்த திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்களால், 1980ல் அருளாளராகவும் பிறகு 2004ல் இதே நாளில் புனிதராகவும் உயர்த்தப்பட்டார். இப்புனிதரின் வழியாக நமது அழைத்தலை (துறவறமோ / பொதுநிலையினரோ) உணர்ந்து இறைவனுக்கு ஏற்ப பிறரன்புப் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் ஞானத்தைப் பெற இத்திருப்பலியில் மன்றாடி பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வழிநடத்தும் அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் உமது பிரசன்னத்தை முழுமையாக உணர்ந்து பணிவாழ்வில் மனந்தளராமல் வாழ்ந்திடவும், தங்களுக்கு கொடுக்கப்பட்ட இறையரசுப் பணியை நிறைவாக செய்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. முழுமையின் முதல்வரே எம் இறைவா, இனிமை நிறைந்த உலகைப்படைத்து, அவற்றை அனுபவிக்க அனைத்தையும் படைத்து மகிழ்ந்தவரே, இன்று அறிவியல் ஆராய்ச்சி என்ற பெயரில் நீர் படைத்தவற்றை அழித்துக்கொண்டிருக்கும் இந்நிலைமாறி மனித நேயமும், இறையச்சமும் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. மன்னிக்கும் மனம்கொண்டவரே, மனமாற்றத்திற்காக கொடுக்கப்பட்ட இந்நாள்களை நாங்கள் முழுமையாக எங்களின் தவறினை உணர்ந்து, உம் திருவுளத்திற்கேற்ப பாவ சிந்தனைகள், பாவநாட்டங்களை விடுத்து, மனம்மாறி உம் இறையரசுப் பணியினை கடைப்பிடித்து, அதன்படி வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.05.2025 பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. திப. 14: 21-27 II. திவெ. 21: 1-5 யோவா. 13: 31-33,34-35

இயேசு உயிர்த்தப்பின் ஆண்டவர் கொடுத்த பணியை முடிக்க பவுலும், பர்னபாவும் அநேக நகர்களுக்குச் சென்று ஒவ்வொரு திருஅவையிலும் மூப்பர்களை தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவார்த்தையை அறிவித்து பிற இனத்தவர் நம்பிக்கைக் கொள்ளுமாறு செய்தார்கள். புனித யோவானும் கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. கடவுள் அவர்களோடு இருப்பார். கண்ணீர் அனைத்தையும் துடைத்து, இனி அனைத்தையும் புதிது ஆக்குவேன் என்றும்

இவையனைத்தும் நம்ப தகுந்தவை, உண்மையானவை என எழுது என்று ஆண்டவர் பணித்ததைக் கூறுகிறார்.

இரவு உணவின் வேளையில் சீடரிடம் இயேசு கூறிய "மானிட மகன் மாட்சி பெற்றுள்ளதையும், அவர் வழியாக கடவுளும், தந்தையின் வழியாக மானிட மகனும் மாட்சி பெறுவர் எனவும், தான் சிறிது காலம் உங்களோடு இருப்பேன், ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை பலரும் அறிந்துக்கொள்வர் என இயேசு கூறியதை யோவான் சுட்டிக்காட்டுகிறார். ஆகவே இயேசு நம்மோடு இருக்கிறார் என்ற எண்ணத்துடன் அவர் கூறிய கட்டளையை நிறைவேற்ற நாம் அனைவரும் ஒன்றுபடுவோம், ஒருவரையொருவர் அன்பு செய்வோம். இது ஆண்டவரின் அன்பு கட்டளை அவர் அன்பு நிலையானது, அவர் அன்பிலிருந்து நம்மை யாரும் பிரிக்கவே முடியாது (உரோ.8:39). நாம் இயேசுவின் உண்மையான சீடர்களாயிருப்போம் என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஊற்றின் உன்னத தேவனே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள் மற்றும் இருபால் துறவறத்தார் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் பணிவாழ்வில் ஏற்படும் எல்லாவித இடையூறுகளிலிருந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் தேவனே, உம்மக்கள் எண்ணற்ற பிரச்சனைகளிலும், துன்பங்களிலும் சிக்கித் தவிக்கின்றனர். இவர்களுக்கு நீரே பக்கபலமாயிருந்து, "என் விருப்பப்படியல்ல, உம் திருவுளப்படியே" என்று கூறி ஜெபிக்க வேண்டிய மனநிலையை எங்களுக்கு அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிப்பவரே எம் இறைவா, பலதரப்பட்ட நோய்களால் அவதியும் மக்களையும், கவனிப்பாரற்ற முதியோர்களையும், வீடற்ற தெருவோர மக்களையும், அனாதை குழந்தைகளையும், உம்கரம் ஒப்புவிக்கின்றோம். அவர்களுக்கு வேண்டிய உடல்நலத்தையும், பாதுகாப்பையும் தரவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பு இறைவா, நாட்டில் வாழும் மக்கள் தாங்கள் செல்லும் பாதை சரியா தவறா என்றும் தெரிந்தும் தெரியாமலும் தங்களின் சூழ்நிலைக்கேற்ப பாவ வாழ்க்கையை மாற்றிக் கொண்டு உமக்கேற்ற மக்களாக உம் வழியில் நாளும் நடந்திட அருள்புரிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

## 22.05.2025 காசியா நகர் புனித ரீத்தா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

அன்பிற்குரிய இறைமக்களே, இந்நாள் மிகப் புனிதமான நாளாகும். புனித ரீத்தா தாயின் பக்தியால் தூண்டப்பட்டு துறவு மேற்கொள்ள விரும்பினார். இவர் பெற்றோரின் விருப்பத்தினால் திருமணம் செய்து கொண்டார். புனிதையின் மன்றாட்டினால் மனம் திரும்பினார், பவுலோ மனம்மாறிய காரணத்தால் அவரின் எதிரிகள் அவரைக் கொலைச் செய்தனர். ஜான், பவுல் என்ற இரு மகன்களும் தந்தையைப் போலவே மூர்க்கர்களாயினர். எனவே திருந்தவேண்டும், இல்லையேல் இறைவா நீர் அழைத்துக் கொள்ளும் என மிக உருக்கமாக தன் பிள்ளைகளுக்காக புனிதை மன்றாடினார்.

இவரின் செபத்தை இறைவன் கேட்டார். திருந்தாமல் பெருந்துன்பம் கொடுத்த இரு பிள்ளைகளையும் இறைவன் தந்தை இறந்த ஓராண்டுக்குள் அழைத்துக்கொண்டார். தனிமையான பிறகு செப தப அறமுயற்சிகளில் ஈடுபட்டு துறவறம் மேற்கொள்ள விரும்பினர். புனித திருமுழுக்கு யோவான், புனித அகுஸ்தின், புனித நிக்கோலாசு துணை வேண்டி இடைவிடாது செபித்தார். அதன் விளைவு பூட்டப்பட்டிருந்த மடத்தின் உள்ளேயிருந்த சிற்றாலயத்தில் மூன்று புனிதர்களும் இரவு இவரை அழைத்துச் சென்று உள்ளே விட்டனர். அதிகாலையில் அருட்சகோதரிகள் உள்ளே வந்து பார்த்து, வியந்து கேட்டபோது புனிதை நடந்ததைக் கூற கன்னியரும் துறவறத்தாரும் ஏற்றுக்கொண்டனர். அன்று முதல் இறைவல்லமையால் இயலாததைக்கூட இறைவனிடம் பெற்றுத் தரும் வரம் பெற்றவராக வல்லமையோடு வாழ்ந்து தன் 76வயதில் இறைவனடி சேர்ந்தார். இன்றைய நற்செய்தி வாசகம், நமக்குக் கூறுவது: “இறைவனோடு இணைந்திருந்தால் மிகுந்த கனி தருவோம்” என்ற இறைவார்த்தையை நமதாக்கி இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இறைவா, எங்கள்தாய் திருஅவையின் பணியாளர்களான எம் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் இறைவனோடு இணைந்து மிகுந்த கனித்தருபவர்களாக செப, தவ, அறச் செயல்களைச் செய்பவர்களாக வாழ வரம் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. தாயும் தந்தையுமான இறைவா, உலகிலுள்ள அனைத்து பெண்களுக்காக மன்றாடுகிறோம். குடும்பத்தில், அலுவலகத்தில், தொழிற்சாலைகளில் பணிபுரியும் இவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இதனால் தளர்ச்சியும் சோர்வும் ஏற்பட்டாலும் உம்மிடமிருந்து விலகாமல் தியாக உணர்வோடு பணிபுரிந்து வாழும் வரம் தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. பரிவிரக்கம் கொண்ட இறைவா, எம் இளையோரை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். புனித ரீத்தாவின் முன்மாதிரியைப் பின்பற்றி, பிறருக்காக பொறுமையுடன் செபிக்கும் பரந்த மனதினைப் பெற்று வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 24.05.2025 கிறிஸ்தவர்களின் சகாய அன்னை விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

1572ம் ஆண்டு கிறிஸ்தவர்களை வெற்றி கொள்வதற்காக இஸ்லாமிய துருக்கியப்படை போர் முரசு கொட்டியது. அன்றைய திருத்தந்தையான 5ம் பத்திநாதர், கிறிஸ்துவ வீரர்கள் அனைவரும் நம்பிக்கையுடன் செபிக்கும்படி கேட்டுக்கொண்டார். லெபாண்டோ எனுமிடத்தில் கிறிஸ்தவர்களை எதிர்த்த துருக்கியர் படுதோல்வியடைந்தது. மரியா கிறிஸ்தவர்களின் சகாயம் என நாடு முழுவதும் போற்றிப் புகழப்பட்டார். வரலாற்றுப் பக்கங்களில் மாவீரன் நெப்போலியன் என்று குறிக்கப்பட்டவன் தாம் பின்பற்றும் கிறிஸ்துவ மதத்திற்கே துரோகம் செய்தான். அவன் செய்த மிகப்பெரிய தவறு 1808ம் ஆண்டு கத்தோலிக்கத் திருஅவையின் தலைவர் 7ம் பத்திநாதரை சிறையிலடைத்தான். ஆயினும் நெப்போலியனின் ஆணவம், அகங்காரம் லெய்ப்ஸிங்க் என்னுமிடத்தில் நடந்த போரில் படுதோல்வியடையச் செய்தது. அதன் விளைவாக திருத்தந்தை 7ம் பத்திநாதர் சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலைப் பெற்றார். கத்தோலிக்க மக்கள் அன்னை மரியாமீது பக்தி கொண்டு செபித்ததின் விளைவே திருத்தந்தையின் விடுதலையாகும். இவ்விடுதலை ஆண்டினை நினைவு கூறவே திருத்தந்தை "கிறிஸ்தவர்களின் சகாயமாதா" எனும் பெயரில் விழாவினை ஏற்படுத்தினார். எனவே நாமும் அன்னையின் மக்களாக நம்பிக்கையுள்ளவர்களாக வாழ இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் உமது இறையரசை கட்டியெழுப்பும் பணியில் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு, தியாகம், மன்னிப்புப் போன்ற மேலான பண்புகளை கட்டிக்காத்து, இறையரசின் சாட்சிகளாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நலமளிக்கும் நல்லாயனே எம் இறைவா, உம் அன்னையை எங்களுக்கு கொடையாகக் கொடுத்தீரே, அவரின் வாழ்வை எம் தாய்மார்கள் அனைவருக்கும் கடைப்பிடித்து தங்களின் பிள்ளைகளை இறைபக்தியிலும், கீழ்ப்படிதலிலும் வளர்த்தெடுக்கும் நல் அன்னையர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. நளிந்தோரை வலுவாக்குபவரே, அதிகாரத்தினால் உலகில் வாழ வழியின்றி ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, உரிமையற்று, நோய் நொடியில்

வலுவிழந்து கொண்டிருக்கும் மக்களை தேற்றி, வாழ்வில் அனைத்து நலன்களும் பெற்று வாழ உம்மை மன்றாடுகின்றோம்.

## 25.05.2025 பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. திப. 15: 1-2, 22-29 II. திவெ. 21: 10-14,22-23 யோவா. 14: 23-29

இறை இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவிற்கு தயாரிக்கும் முன்பும் பின்பும் ஒன்றை கவனித்தோமா என தெரியவில்லை. உயிர்ப்பு என்பது யாது? எங்குள்ளது? யாரிடம் உள்ளது? அதற்குத் தான் இன்றைய இரு வாசகங்களும் நற்செய்தி இறை வார்த்தைகளும் நமக்கு நல்ல புரிதலையும் தெளிவையும் தருகிறது. ஒவ்வொரு சொல்லிற்கும் செயலிற்கும் உயிர்ப்பு தேவை. குழப்பமான சூழல் ஏற்படும்போது இந்த உயிர்ப்பு உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயல்படாமல் எப்படி எங்கு சென்று எதனைக் கொண்டு இயங்க வேண்டும் என வழிமுறைகள் அறிந்து செயல்பட வேண்டும். இப்படித்தான் திருத்தூதர்கள் செயல்பட்டனர் என்று இறை இயேசுவும் குறிப்பிடுகின்றார்.

எனது வார்த்தைகள் அல்ல, எனது தந்தையினுடையது, இன்றுள்ள சூழல் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி நமக்கு நாமே பல துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகி வருத்திக் கொள்கிறோம். 01. அறியாமல் புரியாமல் இருப்போருக்கு (துணையாளர் கற்றுத் தருவார்) 02. பயத்தில் மறந்து விடுவோர்க்கு (நினைவூட்டுவார்) 03. கலக்கம் அடைவோர்க்கு (ஆறுதலளிப்பார்) 04. பயத்தில் தடுமாறுவோரை (தேற்றிடுவார்). இந்த நான்கு உணர்வுகளைப் புறந்தள்ளி நம்மை வழிநடத்துபவர் கதிரவனோ, நிலவோ அல்ல. மாறாக, இறைஒளியே நம்மை வழி நடத்தும். இறை இயேசு தன் அமைதியைத் தருகிறேன் என்கிறார். இது தந்தை, மகன், தூய ஆவியாரின் ஒருங்கிணைந்த ஒளி உடனிருப்பு நம்மோடு பயணிப்பது. ஆகவே தேவை ஏற்படும்போது இன்றைய சிந்தனைகளோடு செயல்பட்டு அமைதியின் இருப்பிடமாக பயணிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே, உம் திருஅவையின் திருப்பணியாளர்களான, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் இயேசுவின் நற்செய்தி போதனைகளை மனதில் நிறுத்தி கடமை உணர்வோடு செயல்படத் தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய்மையின் இறைவா, இவ்வுலக கலாசாரத்தில் நமக்கு பலவிதமான இடர்பாடுகள் ஏற்படுகின்றன. அவற்றை இவற்றிற்கு காரணம், என்ன? இவற்றை எவ்வாறு சரிசெய்வது என்பதற்கான வழிகளைத்

தெரிந்து செயல்பட உயிர்த்த ஆண்டவர் நம்மை வழிநடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தியாகத்தின் ஊற்றே எம் இறைவா, குடும்ப உறவுகளில் சுயநலம், புரிந்துக்கொள்ளாமை, விட்டுக்கொடுக்காமை பலவிதமான பிரச்சனைகள் நிலவிவரும் இக்காலத்தில் நீரே இவர்களோடிருந்து இவர்களின் வாழ்விற்குத் தேவையான பாதையை வழிநடத்தி ஆசீரவதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வில் தடுமாறுவோருக்கு உற்றத் துணையாக இருப்பவரே, உலகிலும், குடும்பங்களிலும் பலவிதமான பிரச்சனைகளும், சோதனைகளும், வேதனைகளும் எங்களை ஆட்கொண்டு வாழ்வில் நிலைத்தடுமாறி விழுகின்ற நேரங்களில் நீரே உடனிருந்து பாதுகாத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 29.05.2025 அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

ஜோசப் கொவால்ஸ்கி 1912ம் ஆண்டு போலந்து நாட்டிலுள்ள க்ராகௌ என்னும் ஊரில் பிறந்தார். 1929ம் ஆண்டு சலேசிய சபையில் சேர்ந்தார். தனது முதல் அர்ப்பண நாளன்று ஆன்மீக குறிப்பேட்டில், "இயேசுவே, எனக்கு வலிமையும் உறுதியும் கொண்ட உள்ளத்தைத் தாரும். நான் புனிதராக வேண்டும், உம்மாலன்றி என்னால் ஒன்றும் செய்ய இயலாது, என்னை அன்பு செய்யும் உம்மோடு என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்" என்று எழுதி வைத்திருந்தார். களப்பயிற்சி பணியை முடிக்கும் நிலையிலிருந்தபோது தனது மனவலிமையினாலும் ஆன்ம குருவின் வழிகாட்டுதலாலும் அதற்கு தீர்வு கண்டார். 1938ம் ஆண்டு அவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டபின் அவரது மாநிலத்தலைவருக்கு உதவியாளராக இருக்கும் பொறுப்பினை ஏற்றார். கடிதங்களை எழுதுவது, சுற்றுமடல்களை அனுப்புவது, குறிப்புகளைச் சேகரிப்பது போன்ற எளிய பணிகளைத் திறம்படச் செய்தார்.

தான் புனித ஜான் போஸ்கோவின் புதல்வன் என்பதை ஒருபோதும் மறந்துவிடவில்லை. இசையில் அதிக ஆர்வம் கொண்டவராக இருந்ததினால், மாணவர்களை ஒன்று கூட்டி, திறமையுடன் இசைக்குழு ஒன்றை வழிநடத்தி வந்தார். அந்நேரத்தில் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. அப்போது சிறைப்பிடிக்கப்பட்டு, சிறையில் இவரும், இவருடன் பிடிப்பட்ட மற்ற குருக்களும் பல கொடுமைகளுக்கு ஆளானார்கள். 1942ம் ஆண்டு பிப்ரவரி 12ம் நாள் எழுதிய கடிதத்தில் அவர் பின்வருமாறு எழுதி வைத்திருந்தார். "எனது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இறைவனது வல்லமையை உணர்கிறேன். நான் எங்கிருந்தாலும் எனக்கு என்ன நேர்ந்தாலும் உலகமனைத்தையும் ஆள்கின்றவரும் ஒவ்வொருவரையும் கண்காணிப்பவருமான, இறைவனின் பராமரிப்பில் நான் இருக்கிறேன்".

1942ஆம் ஆண்டு ஜூன் 2ம் நாள் ஆஸ்விட்ஸ் என்ற இடத்திலிருந்து, டக்காவு என்ற இடத்திலுள்ள சிறைச்சாலைக்கு 60 குருக்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதில் தந்தை கொவால்ஸ்கியும் ஒருவர். அவர் தனது கையில் செபமாலை ஒன்றை வைத்திருப்பதைக் கண்டறிந்த சிறை அதிகாரி அதைக் காலால் மிதிக்கச் சொன்னார். அதைச் செய்ய மறுத்ததால் 1942ஆம் ஆண்டு ஜூன் 2ம் நாள் அவரைக் கொல்வதற்காக அழைத்து செல்லப்பட்டபோது அவர் தன்னிடமிருந்த ரொட்டித் துண்டுகளைத் தம் நண்பர் சிஜிஸ்போண்டி கொலன்கொவால்ஸ்கியிடம் கொடுத்து "இதை பெற்றுக்கொள், இது எனக்கு இனி தேவைப்படாது" என்று கூறினாராம். பிறகு அவர் "எனக்காகவும் என்னைத் துன்புறுத்துவோருக்காகவும் செபியுங்கள்" என்று உரத்த குரலில் கூறினார். அவரைத் துன்புறுத்தியபின் கழிவு நீர்த்தொட்டியில் உயிரோடு அமிழ்த்திக் கொன்றனர். அப்போது அவருக்கு வயது 31. இரண்டாம் உலகப்போரின்போது மறைசாட்சியாக இறந்த இவரையும், இவரோடு சேர்ந்த 108 பேரையும் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், 1999ம் ஆண்டு 12ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இயேசுவுக்காக தன்னையே வழங்கும் தியாகத்தை நாமும் பெறவும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையை வழிநடத்தும் கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவியர் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை பொறுப்புடனும், பாதுகாப்புடனும் நல்வழியில் நடத்திச் செல்ல, உமதாற்றலைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, உலகிலுள்ளோர் அனைவரும் உமது பிள்ளைகள் என்பதை மறந்த நேரங்களுக்காக பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இவர்களை நீரே உடனிருந்து பாதுகாத்து வழிநடத்த வேண்மென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய தந்தையே, தீமைகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு தங்களின் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டிருக்கும் இளையத் தலைமுறையினரை ஆசீர்வதியும். அவர்கள் உம் வார்த்தைக்குட்பட்டு, அவ்வழியில் நாளும் நடந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 31.05.2025 புனித கன்னிமரியாவை எலிசபெத் சந்தித்தல் திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது"

இன்று நாம் தூய கன்னிமரியா எலிசபெத்தை சந்தித்த விழாவை கொண்டாடுகிறோம். எலிசபெத் என்றால் "இறைவன் என் நற்பேறு"

என்பது பொருள். எலிசபெத் அபியா வகுப்பைச் சார்ந்த குரு சக்கரியாவின் மனைவி. இவர்கள் யூதேயாவின் மலைநாட்டிலுள்ள அயின்கெரேமின் நகரில் வாழ்ந்தனர். (இவர்கள்தான் திருமுழுக்கு யோவானின் பெற்றோர்) நெடுங்காலமாக குழந்தையில்லாது தவித்த எலிசபெத்துக்கு வயது முதிர்ந்த நிலையில் கடவுளின் தூதர் அறிவித்ததின்படி, எலிசபெத் கருவுற்றிருந்தார் (லூக்.1:13). இயேசுவின் தாய் மரியா எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தைக் கேட்டவுடன் எலிசபெத்தின் வயிற்றிலிருந்து குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத் மரியாவை வாழ்த்தினார்.

இறைவனின் தனிப்பெரும் கருணையைச் சுவைத்த இருவரும் சந்தித்துக்கொண்ட இந்நிகழ்வை பிரான்சிஸ்கும் துறவற சபையினர் 1263ஆம் ஆண்டு முதன் முதலில் கொண்டாடினார்கள். பின்னர் திருத்தந்தை ஆறாம் ஹர்பன் 1389ல் உலகளாவிய விழாவாக்கினார். தற்போது இந்த விழாவானது இயேசு பிறப்பு அறிவிப்பிற்கும் மார்ச் 25 திருமுழுக்கு யோவானின் பிறப்பிற்கும் ஜூன் 24 இடையில் மே 31 கொண்டாடப்படுகிறது. வயதான எலிசபெத்தை மரியா (இறைவனின் தாய்) தேடிச்சென்று, ஏறக்குறைய மூன்று மாதங்களே தங்கியிருந்து உதவிச் செய்து வீடு திரும்பினார். தூய கன்னிமரியாவைப்போல் நாமும் இயலாத நிலையில் உள்ளவர்களை தேடிச்சென்று உதவுவோம், அன்னையின் பிள்ளைகள் நாம் என்பதினை செயலில் காட்ட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்லவரே, உம் திருமகனை தலையாய கொண்டு பயணிக்கும் திருஅவை அவர் கற்பித்த அன்பு, நீதி, இரக்கம், மற்றும் பரிவுள்ளத்தோடு தன்னை நாடி வரும் இறைமக்களை அரவணைத்து, அன்பு செய்து, பரிவுள்ளத்தோடு மக்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. என்றும் வாழும் எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் சுயநலத்தோடு வாழாமல், மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவர்களின் உரிமையை நேர்மையான வழியில் செயல்படுத்தும் நல்லாட்சியாளர்களாக செயல்பட உமது கருணை உள்ளத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்

3. அமைதியின் அருட்சுடரே எம் இறைவா, நாட்டில் எங்கும் கொலை, கொள்ளை, வன்முறை போன்ற செயல்கள் தலைவிரித்தாடுகின்ற இவ்வேளையில் தாங்கள் செய்வது தவறான செயல் என்பதை உணர்ந்து நல்வழியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு மகிழ்வாக நாளும் வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புனித மரிய தொமினிக்கா மசரெல்லோவின் வாழ்க்கை வரலாறு

திரு. ஜான் அலெக்ஸ்

இத்தாலியில் மார்நீஸ் என்னும் ஊரில் 1837 மே 9ம் நாள் பிறந்த மேரி டொமினிக்கா மசரெல்லோ, எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழும் பழக்கத்தையும் எல்லோரையும் மதித்துப் பழகும் பண்பையும் கொண்டிருந்தார். பங்கு தந்தை பெஸ்டாரினோ உருவாக்கி இருந்த அமல அன்னை சகோதரிகள் என்ற அமைப்பில் தமது 15 வயதில் உறுப்பினரானார். தொடர்ந்து பணியாற்றிய இவரை எங்கு சென்றாலும் சிறுவர்கள் மொய்த்துக் கொள்வார்கள். இவரின் அன்பில் நனைவார்கள். 23ம் வயதில் நகர் முழுவதும் டைப்பாய்டு காய்ச்சல் தொற்றுநோய் பரவியது. கிராமம் கிராமமாய் சென்று நோயுற்றோர்களுக்கு உதவி செய்தும் இறந்தவர்களை நல்லடக்கமும் செய்தார்கள். இதில் மசரெல்லோவிற்கும் டைப்பாய்டு காய்ச்சல் தொற்றியது. படுத்த படுக்கையான மசரெல்லோ, சாவின் வாயிலைத் தொட்டு நின்றார். நோயில் பூசுதலுக்கு பின் இறைவன் முன்குறித்திருந்த மசரெல்லோ, நலமுடன் எழுந்தார். ஆனாலும் முன்பிருந்த வேகம் குறைந்து நோயின் தாக்கம் அதிகமாக இருந்தது. எனவே வீட்டிலேயே ஓய்வெடுத்து வந்தார் மசரெல்லோ.

மசரெல்லோ, ஒரு நாள் தெருவில் நடந்து வருகையில் எதிரே மிகப்பெரிய கட்டிடம் இருப்பது போலவும் அதன் முற்றத்தில் பெண் குழந்தைகள் விளையாடுவது போலவும் கண்டார். அப்போது "இவர்களை உன்னிடத்தில் ஒப்படைக்கிறேன்" என்ற குரலொளியைக் கேட்டார். இதே அனுபவத்தை புனித தொன் போஸ்கோவும் பெற்றார். முற்றத்தில் கைவிடப்பட்ட பெண் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பதையும், "இவர்கள் எனது குழந்தைகள், இவர்களைக் கவனித்துக்கொள்" என்ற குரலொளியையும் கேட்டார். அருட்தந்தை பெஸ்டாரினோ, அமல அன்னை சகோதரிகள் அமைப்பில் இருந்த 15 இளம் பெண்களையும் ஆன்மீகத்தில் வளர்த்தெடுத்தார். இவர்களைத் தனி இல்லத்தில் ஒரு குழுமமாக வாழ வைத்தார். இந்த சகோதரிகள் விரைவில் சில சிறுமிகளைத் தங்கள் இல்லத்தில் சேர்த்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் தையல் தொழில் கற்றுக்கொடுத்தார்கள்.

ஏற்கெனவே குருக்கள் மற்றும் சகோதரர்களுடன் சலேசிய சபையினர் மாணவர்களை வழிநடத்தி வந்தார்கள். இளம் பெண்களுக்கும் அதே போன்ற அமைப்பு வேண்டும் என்று நினைத்த தொன்போஸ்கோ இந்த சகோதரிகளது அமைப்புக் குறித்து கேள்விப்பட்டார். அவர்களது அர்ப்பணிப்பு உண்மையானது என்றால் அந்த அமைப்பை சலேசிய சகோதரிகள் சபையை உருவாக்கலாம் என்று முடிவெடுத்து அவர்களைச்

சந்திக்க சென்றார். ஆனால் தங்கள் அமைப்பிற்கு உதவி கேட்க வந்திருப்பதுபோல ஒரு சிறுவனுடன் சென்றார். அவர்களது பணி குறித்தும் வாழ்வின் தேடல் குறித்தும் விசாரித்தார். அவர்கள்மீது நம்பிக்கை கொண்டார். அமல அன்னையின் சகோதரிகள் அமைப்பில் இருந்த 15 பேரையும் வைத்து, "கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர்கள் சபை"யை 1872 ஜூலை 31ம் நாள் உருவாக்கினார். பொதுத் தேர்தல் நடத்தும்வரை தற்காலிகத் தலைவராக இருக்கும்படி மசரெல்லோவை தொன் போஸ்கோ கேட்டுக்கொண்டார். போதிய கல்வியறிவு இல்லை எனக் கூறி மறுத்த மசரெல்லோ, பின்னர் கீழ்ப்படிதலுடன் சம்மதித்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் மசரெல்லோ முதல் தலைவியாகத் தேர்வானார். இளம் பெண்களைப் பராமரித்தல், கற்பித்தல், மீட்பின் பாதையிலும் தனிமனித ஆளுமை வளர்ச்சியிலும் வழிநடத்துதல் ஆகியவற்றைத் தம் பணியின் இலக்காகக் கொண்டு செயல்பட்டனர். எல்லோருடனும் அமர்ந்து எப்படி வாசிப்பது, எப்படி எழுதுவது என்பதை முறைப்படி கற்றார். மசரெல்லோ தாழ்ச்சியுடன் அவர்களோடு சேர்ந்து தானும் கற்றார். அறிவுத் தேடலுடன் நிற்காது பணிகளை விரிவுப்படுத்தினார். தென் அமெரிக்காவிற்கு சகோதரிகளை அனுப்பினார். அவர்களை ஊக்கப்படுத்த அவர்கள் பணியாற்றிய இடங்களைச் சென்று பார்வையிட்டார். அந்த பயணங்களில் கப்பல் சிதைவில் சிக்கி நோயுற்றார்.

மரணப் படுக்கையில் இருந்த மசரெல்லோ, தம் சகோதரிகளிடம், "என் இறப்பிற்குப் பிறகு நீங்கள் பேராசைப்படுவீர்களோ என்றும் அடுத்த தலைவிமீது பொறாமைப்படுவீர்களோ என்றும்நான் அஞ்சுகிறேன். அன்னை மரியாவே நமது சபையின் தலைவி என்பதை நினைவில் கொள்ளுங்கள். வழிநடத்தும் சுமையான பணியை ஏற்பவருக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடங்கள். இரண்டாவதாக ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யுங்கள். ஆனால் உங்களுக்காக நியமிக்கப்படும் ஆன்ம குருவிடம் உங்கள் கை எப்போதும் இருக்கட்டும்" என்று கூறினார். இறைவனுக்கு முழு அர்ப்பணத்துடனும் அடுத்தவர்களுக்கு முழு அன்புடனும் உழைத்த மசரெல்லோ, இறைவன் தன்னை அழைத்தபோது 1881 மே 14ம் நாள் இறந்தார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1938 நவம்பர் 20ம் நாள் அருளாராக உயர்த்தினார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1951 ஜுன் 24ம் நாள் அன்று புனிதராக உயர்த்தினார்.

## கிறிஸ்தவர்களின் சகாய அன்னை நமக்குத் தரும் செய்தி

திரு. ஹென்றி ஸ்டீபன்

இரக்கத்தின் அரசியாம் அன்னை மரியாள்மீது நாம் வைக்கும் நம்பிக்கை பெரிதாக இருக்க வேண்டும். மகன் ஓர் அரசன் என்றால், அவரைப் பெற்றெடுத்த அன்னை அரசி என்னும் ஆட்சிக்குரியவள் என்றும் நியாயப்படியும், உண்மையிலும் கருதப்பட தக்கவரே என்று

புனித அத்தனாசியார் கூறுகிறார். திருச்சபையும் அன்னையை அரசி என்ற உன்னதப் பெயரால் மகிமைப்படுத்துகிறது. பாவிகளை மன்னிப்பதில் மட்டுமல்ல, துன்ப துயர வேளைகளில் அவளது அருளையும் துணையையும் வேண்டும்போது பரிவுடன் ஏற்று அரவணைத்து காத்து வருவதால் இரக்கத்தின் அரசி என்று சிறப்பாக அழைக்கப்படுகிறாள். கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் அவள் தாயாக விளங்குகிறாள். சிலுவையடியில் தூய யோவானுக்கு இதோ உன் தாய் என்று கூறிய நேரமுதலே எல்லா மனிதருக்கும் தாயானாள். இதோ இந்நாள் முதல் எல்லா தலைமுறையினரும் என்னை பேறுடையாள் என்று போற்றுமே என்று மரியா கூறியது நிறைவேறிக்கொண்டேயிருக்கிறது.

**சகாய அன்னையின் திருநாள் திருத்தந்தை 7ம் பயஸ் (7ம் பத்திநாதர்) என்பவரால் தொடங்கப்பட்டது. அதன் வரலாறு பின்வருமாறு நிகழ்ந்தது.**

அன்று மேல்திசை நாடுகள் எல்லாம் நடுங்கி ஒடுங்கிக் கொண்டிருந்தன. மக்கள் அழிவின் வாசலிலே தாங்கள் நிற்பதாக எண்ணி கொலை நடுக்கம் கொண்டனர். கிறிஸ்தவ நகரமே ஆட்டங்கண்டது. ஆம், துருக்கியரின் படையெடுப்பாலும் அவர்களது போர் திறமையாலும் வெற்றிமேல் வெற்றிச்சூடி, நாடுகளையெல்லாம் சூறையாடி தன் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டு ஐரோப்பிய நாடுகளை நோக்கி முன்னேறிக் கொண்டு வந்ததால் அவைகளை கண்டவர்கள் நிலைகுலைந்து விட்டனர். கடலிலே கப்பலோடு கப்பல் மோதின. கடும் போர், லெப்பாந்தோ கடலில் தொன் ஜூவான் தளபதியின் படைகளுக்கும் துருக்கியப் படைகளுக்கும் பெரும் போர் மூளவே யாருக்கு வெற்றி என்ற தவிப்பும், எதிரியின் எண்ணற்ற வீரர்களையும் அவர்களின் பலத்தையும் கண்ட கிறிஸ்துவ உலகத்தினர் சொல்லொண்ணா துன்பம் அடைய கண்ணீர் கண்களிலே மல்க கன்னிமரியின் அபயம் தேடி கைவிரித்து வேண்டினர். அந்த அவல நேரத்தில் கன்னிமரி அபயம் அளித்தாள். எதிரிகளுக்கு சாதகமாக வீசிய காற்று திடீரென அற்புதவிதமாக கிறிஸ்தவ போர் வீரர்களுக்குத் துணையாக திசைமாறி வீச கப்பல்கள் மோதி சிதறின. தீப்பற்றியெரிந்தன. கிறிஸ்துவ படை துருக்கியரை துரத்தி முறியடித்து வெற்றி வாகை சூடியது. காப்பாற்றிய தாய்மரியை புகழ்ந்தேற்றினர்.

திருத்தந்தை 5ம் பத்திநாதரோ தாய்மரி செய்த தன்னிகரற்ற செயலுக்கு நன்றியறிதலாக கிறிஸ்தவர்களின் சகாயமான புனித மரியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்ற வேண்டுதலால் "லொரெட்டோ" மன்றாட்டு மாலையில் சேர்த்து மகிழ்ந்தார். இவையனைத்தும் கி.பி. 1571ம் ஆண்டிலே நிகழ்ந்தன. ஆண்டுகள் பல கழிந்தன. மீண்டும் மேல்நாட்டின் வரலாற்றிலே மாபெரும் மாற்றம். மக்களுக்கோ பெரும் ஏமாற்றம் நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக நெப்போலியனின் காலடிகளிலே விழுந்தன. ஐரோப்பா கண்டத்தையே ஆட்டிப்படைத்தான். அன்று திருமறைத்

தலைவராக விளங்கிய 7ம் பத்திநாதரை தன் கையப்பாவையாக்க முனைந்தான். தன்னை ஐரோப்பிய பேரரசனாக பிரகடணப்படுத்தினான். நெப்போலியனின் ஆணைக்கிணங்க திருத்தந்தை 7ம் பத்திநாதரை ஜீலை 5, 1808 அன்று கைது செய்து மூன்று வருடகாலமாக சவோனா என்னுமிடத்தில் சிறையில் அடைத்து வைத்திருந்தான். 1814ம் ஆண்டு ஜனவரி மாதம் லேபிஸ் (Leifzig) போருக்குப் பிறகு அவரை சவோனாவின் பாதுகாவலியான இரக்கத்தின் அன்னையின் திருவிழா நாளான மார்ச் 17ம் தேதி அன்று விடுதலை செய்தார்கள்.

அங்கிருந்து திருத்தந்தை ரோமிற்கு வெற்றி பயணம் மேற்கொண்டார். அவர் திருச்சபையின் பல இன்னல்களுக்கு பிறகு கிடைத்த இந்த மகத்தான வெற்றியை பறைச்சாற்றும் விதமாக அவர் செல்லும் வழிகள் தோறும் இருந்த தேவ அன்னையின் திரு உருவ சுருபங்களுக்கு கிரீடங்கள் அணிவித்தார். நெப்போலியனை தைரியமாக எதிர்கொண்டு வெற்றிப்பெற்ற திருத்தந்தையைக் காண மக்கள் திரளாக வீதிகளில் கூடினர். மே 24, 1814 அன்று ரோம் நகரத்தினுள் வந்த தந்தையை உற்சாகமாக வரவேற்றனர். தானும், திருச்சபையிலுள்ள மற்றவர்களும் அடைந்த துன்பத்தை நினைவுக்கூறும் வகையில் வியாகுல அன்னை திருவிழாவை செப்டம்பர் 18, 1814ம் ஆண்டு கொண்டாடினர். கடவுளுக்கும் அன்னை மரியாவுக்கும் நன்றி செலுத்தும் விதமாக செப்டம்பர் 15ம் நாள் 1815அன்று ரோம் நகரத்தில் சகாய அன்னையின் திருநாளை மே 24ம் நாள் அன்று கொண்டாடவேண்டும் என்று உறுதிப்படுத்தினார்.

## விடுமுறை விவிலியப் பள்ளி - ஒரு கொண்டாட்டம்

திரு. விக்டர்

### விடுமுறை விவிலியப் பள்ளி (VBS) என்றால் என்ன?

இதற்கான பதில் சுருக்கமாகச் சொல்வதென்றால், கோடை விடுமுறை நாட்களில் இருக்கும் சிறுவர், சிறுமியருக்கும் இளையோருக்கும் பாடல்கள், விளையாட்டுகள், நடனங்கள், நாடகங்கள், விவிலிய விளக்கங்கள் வழியாக "கற்றலின் இனிமை" முறையில் திருவிவிலியத்தைக் கற்றுக்கொடுக்கும் ஒரு அமைப்பே விடுமுறை விவிலியப் பள்ளியாகும். கோடை விடுமுறையில் சிறுவர், சிறுமியர்கள் இயேசுவைத் தேடி வரவும், விவிலியம் பற்றிய அறிவும் தெளிவும் பெற்று இறைவார்த்தையின் வழியாய் வாழவும் பயிற்றுவிக்கும் திட்டமே "விடுமுறை விவிலியப் பள்ளி" திட்டமாகும்.

### தோற்றமும் வளர்ச்சியும்

விடுமுறை விவிலியப் பள்ளி (VBS) என்பது 1890ல் அமெரிக்க நாட்டிலுள்ள நியுயார்க் நகரில் முதன் முதலாக ஒரு பள்ளி ஆசிரியையால் தொடங்கப்பட்டது. பள்ளியில் குழந்தைகளுக்கு விவிலியம் கற்பிக்க நேரம் போதவில்லை என்பதற்காக கோடை விடுமுறை நாட்களில் நான்கு வாரங்களில் நடக்கும் வகுப்பாக இது தொடங்கப்பட்டது. முதல்

வகுப்பில் நாற்பது குழந்தைகள் பயின்றனர். அடுத்த சில ஆண்டுகளில் ஒரு சில புதிய இடங்களில் இப்பள்ளியானது விரிவடைந்து, பின்னர் 1922ம் ஆண்டில் "பாப்டிஸ்ட் மிஷனரி சொசைட்டி" என்ற அமைப்பினர் விவிலிய விடுமுறைப் பள்ளியை உலகறியச் செய்தனர். அவர்களுடைய பணித்தளங்களில் இப்பள்ளி தொடங்கப்பட்டு வேகமாக வளர்ந்தது. இந்தியாவில் விடுமுறை விவிலியப் பள்ளியானது மேரி ஹாமில்டன் என்பவர் வழியாகவும் அவரது கணவர் வழியாகவும் தமிழ்நாட்டில் உள்ள கோவில்பட்டி என்கிற சிறிய ஊரில் முதன்முதலாகத் துவங்கப்பட்டது. தென் தமிழகத்தில் இப்பள்ளிக்கு வரவேற்பு மிகுந்திருந்ததால் தமிழக கத்தோலிக்க திருஅவையும் இப்பள்ளியை தங்களது மறைமாவட்டங்களில் தொடங்க ஆரம்பித்தது. 1980களில் தமிழகத்தில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் இப்பள்ளியானது விரிந்து பரந்தது.

### விடுமுறை விவிலியப் பள்ளியின் (VBS) நோக்கம் என்ன?

இயேசு வளர வளர ஞானத்திலும், அறிவிலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்ததைப்போல (லூக். 2:52) நமது குழந்தைகளுக்கு திருவிவிலியத்தை நேரடியாக அறிமுகம் செய்து, திருவிவிலியத்தைத் திறந்து வாசிக்கவும், சிந்திக்கவும், செபிக்கவும் அதன்படி வாழவும் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கமாகும். மாணவ மாணவியர் ஒன்றுகூடி ஆடிப்பாடி, விளையாடி,கலைவழியாகவும், பாடங்கள், பாடல்கள், பயிற்சிகள் வழியாகவும் திருவிவிலியத்திலிருந்து கடவுளின் அன்பைக் கற்றறிந்து அவரை ஆராதிக்கவும், மனித மாண்பைக் கண்டறிந்து மதித்துப் பேணி வாழவும் கற்றுக்கொள்ளச் செய்வதே இதன் நோக்கமாகும்.

### விடுமுறை விவிலியப் பள்ளி (VBS) இயங்கும் முறை

UKG வகுப்பு முதல் பதினொன்றாம் வகுப்பு வரையுள்ள மாணவ மாணவியரின் வயது, உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, அறிவு வளர்ச்சி, சமூக நிலை ஆகியவற்றிக்கேற்ப மாணவ மாணவியர் நான்கு குழுக்களாய் பிரிக்கப்படுவர்.

**முதல் குழு:** ஆர்வ நிலையினர் (UKG to IInd Std)
**இரண்டாம் குழு:** தொடக்க நிலையினர் (III to V Std)
**மூன்றாம் குழு:** இளநிலையினர் (VI to VIII Std)
**நான்காம் குழு:** முதுநிலையினர் (IX to XI Std)

மேலே குறிப்பிட்ட குழுவினருக்கேற்ப ஒவ்வொரு குழுவுக்கும் ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி ஏடு என்று (VBS) பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மூன்று ஆண்டுகளில் முழு விவிலியத்தையும் கற்றுக் கொள்ளும் விதத்தில் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக விவிலியப் பணிக்குழு இதற்கான விரிவான முன்னேற்பாடுகளைச் செய்துள்ளது. ஒரு வகுப்பை எப்படி, எவ்வளவு நேரம் நடத்த வேண்டும்?

என்கிற அட்டவணை வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் எப்படி பாடம் நடத்த வேண்டும்? என்று விரிவான கையேடு ஒன்று உண்டு. ஒவ்வொரு குழுவுக்கும் தனித்தனி ஆசிரியர்கள் கையேடு உண்டு. இக்கையேட்டில் வகுப்பு நடக்கும் நாட்களுக்கான இறைவார்த்தை குறிப்பு, போதனாமுறை, கலைவழிப் பயிற்சி முறைகள் பல இடம் பெற்றுள்ளன. வகுப்புகளைச் சுவையுடன் நடத்துவதற்கு இக்கையேடு மிகவும் பயனுள்ளதாகும். ஆசிரியர் கையேட்டையொட்டி ஒவ்வொரு நாளுக்கும் மாணவருக்கேற்ற பல்வேறு பயிற்சிகள் இந்த ஏட்டில் உண்டு. இந்த பயிற்சியேட்டை உபயோகப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் பல்வேறு திறன்களை வெளிக்கொணர முடிகிறது. ஒன்பது நாள்கள் வகுப்பு என்றும், பத்தாவது நாள் தாங்கள் கற்றதை வெளிப்படுத்தும், கலைநிகழ்ச்சியின் நாளாகவும் சிறப்பித்து நிறைவு செய்யப்படுகிறது.

### VBSக்கான துணைக் கருவிகள்

விடுமுறை விவிலியப் பள்ளியில் பயன்படுத்தப்படும் துணைக் கருவிகள் மாணவர்களின் உற்சாக பங்கெடுப்புக்கு உதவி செய்வதாய் உள்ளன.

1. ஒவ்வொரு ஆண்டும் ஒரு புனிதரது வரலாறு தொடர்கதையாக மாணவர்களுக்கு ஒன்பது நாட்களும் சொல்லப்படும். அப்புனிதரின் படத்தை ஒட்டி அதை வருகைப்பதிவாகவும் பயன்படுத்தலாம். குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்த அந்த ஆண்டின் தலைப்பையொட்டி தொப்பிகள் வழங்கி உற்சாகப்படுத்தலாம்.

2. ஆண்டின் மையக் கருத்தையும், விவிலியப் பாடங்களையும் அடிப்படையாகக் கொண்ட இனிய, எளிய, குழந்தைகள் பாடக்கூடிய பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளிக் குறுந்தகடு ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகிறது.

3. பொம்மைகளைப் பயன்படுத்தி விவிலிய நிகழ்வுகளை பொம்மலாட்ட நிகழ்ச்சி மூலம் வெளிப்படுத்தலாம். குழந்தைகளுக்கு அதில் அதிக ஆர்வமுண்டு. படங்களை உபயோகித்து விவிலிய நிகழ்வுகளை, கதைகளைச் சொல்ல வைக்கலாம்.

4. விவிலிய விளையாட்டுகள் மிக முக்கியமான அங்கமாகும். எந்த விளையாட்டையும் விவிலிய நிகழ்வுகளையும் இணைத்து விளையாடும் பொழுது விளையாடியவாறு விவிலியத்தைக் கற்றுக்கொள்கின்றனர். இதற்காகவே திருவிவிலிய விளையாட்டுகள் அடங்கிய புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### செய்ய வேண்டிய முன் தயாரிப்புகள்

பங்கு மையத்திலும் கிளைத்தளங்கள் அனைத்திலும் VBS நடத்தப்பட வேண்டும். சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள் (லூக் 18:16) என்கிறார் இயேசு. எனவே சிறுபிள்ளைகள் இருக்கும் இடங்கள்

அனைத்திலும் VBS நடத்தப்பட வேண்டும். இதற்கான ஆசிரியர்களைத் தயாரிக்க வேண்டும். தன்னார்வமுள்ள பள்ளி ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், படித்த படித்துக் கொண்டிருக்கும் இளைஞர் இளம் பெண்கள், பக்த சபையினர், குடும்ப பெண்கள் இப்படி யார் வேண்டுமானாலும் VBS ஆசிரியராக பணிபுரியலாம். இவர்கள் செபத்துடன் கூடிவந்து முன்னதாகவே பங்குத்தந்தை மற்றும் பங்கு பேரவையுடன் கலந்து பேசி அவர்களின் ஒத்துழைப்புடன் நன்கு திட்டமிடல் வேண்டும்.

VBS வகுப்புக்கு வரவிருக்கும் மாணவ மாணவியரின் பட்டியல் முன்னதாகவே தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். VBS வகுப்புகளுக்கு சில வாரங்களுக்கு முன்பே VBS பற்றிய விளம்பரம் செய்ய வேண்டும். VBS வகுப்புகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிவைக்க பெற்றோரை ஊக்குவித்தல் வேண்டும். தேவையான துணைக்கருவிகள் ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி ஏடுகள் இவற்றைத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். வகுப்பு நாட்களில் மாணவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும். பங்குத்தந்தையின் உதவியுடன் இதற்கான நன்கொடையாளர்களைத் தேர்வுச் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். VBS நாட்களில் ஒருநாள் இன்பச் சுற்றுலா அழைத்துச்சென்று பிள்ளைகளை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தலாம். VBS ஆசிரியர் அனைவருக்கும் மாநில அளவில் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்கு ஆசிரியர்களை அனுப்பிவைத்து சிறந்த ஆசிரியர்களை உருவாக்கலாம்.

**விடுமுறை விவிலியப் பள்ளியின் VBS பயன்கள் என்ன?**

1. இறைவார்த்தையைச் சிறார்களுக்கு அறிவித்து, அவற்றை உள்ளத்தில் பதியச் செய்கிறது.

2. இயேசுவே நமது வழியும், வாழ்வும், உண்மையும் என்பதை சிறுவயது முதலே ஏற்றுக்கொள்ளவும், இறைவார்த்தை ஒளியில் நல்ல பல தீர்மானங்களை எடுத்து வாழ்வில் கடைப்பிடிக்கவும் VBS கற்றுக் கொடுக்கிறது.

3. ஆடல், பாடல், கதை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுகள் மூலம் திருவிவிலியத்தைக் கற்பதால் இறையாட்சியின் உண்மைகளும் மதிப்பீடுகளும் மிக எளிதாக மனதில் பதிந்து வாழ்வில் நற்கனி விளைய VBS உதவுகிறது.

4. ஆறுதலும் விடுதலையும் வாழ்வும் தரும் இறைவார்த்தைகளை மனப்பாடம் செய்வது வெற்றியுள்ள செபத்திற்கும் கிறிஸ்தவ சாட்சிய வாழ்வுக்கும் பயிற்சியாய் அமைகிறது.

5. மறைக்கல்வி வகுப்புகளிலும் அருளடையாள வாழ்விலும் நற்செய்தி

அறிவிப்புப் பணியிலும் ஆர்வமுடன் பங்குபெற VBS ஊக்குவிக்கிறது.

6. VBS ஆசிரியர்களாகப் பணியாற்றும் இளைஞர் இளம் பெண்கள், ஆசிரியர்களின் திறமைகளையும், தலைமைத்துவப் பண்பையும் VBS வளரச் செய்கிறது.

7. பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகள் வழியாக நற்செய்தி அறிவு அளிக்கப்படுகிறது. இவ்வாறு VBS பன்முகப் பயன் கொண்டதாக விளங்குகிறது. விடுமுறை விவிலியப் பள்ளியில் நாமும் பங்கெடுப்போம், நமது குழந்தைகளையும் பங்குபெற வைப்போம்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### அமைதியின் திருத்தந்தையாகத் திகழ்ந்தவர் திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக அமைதிக்காக தனது விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் இடையறாது எடுத்துரைத்தவர். போர் மற்றும் வன்முறையால் துன்புறுபவர்கள், ஏழைகள், வலுகுறைந்தவர்கள், ஒதுக்கப்பட்ட மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்தவர். எடுத்துக்காட்டாக, தான் இறுதியாக வழங்கிய, 'ஊருக்கும் உலகிற்கும்' எனப் பொருள்படும் 'ஊர்பி எத் ஓர்பி' செய்தியிலும் கூட, உலக அமைதிக்காக மக்கள் அனைவரும் செபிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டவர். போரில் ஈடுபடும் நாடுகளின் தலைவர்கள் அனைவரும் போரினை விடுத்து, உரையாடல் வழிகளில் அமைதிக்கான தீர்வுகளை நாடவேண்டும் என்பதை அதிகமாக வலியுறுத்திவர். மூச்சுக்குழல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு சுவாசிக்க முடியாமலும், பேச முடியாமலும் இருந்த நிலையிலும் கூட உலக அமைதிக்காக செபிக்க மறக்காதவர். தன்னால் திருப்பயணிகளுக்குக் கருத்துக்களை எடுத்துரைக்க இயலாத நிலையிலும், கர்தினால்கள் மற்றும் ஆயர்களை தனது கருத்துக்களை எடுத்துரைக்கும்படி கூறியவர். பன்னிரண்டு ஆண்டு காலம் திருத்தந்தையாகப் பணியாற்றி திருஅவையை சீரும் சிறப்புமாக வழிநடத்தி வந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகக் கத்தோலிக்க இயக்கங்களுக்கு அமைதிக்கான செயல்பாடுகளை தனது வார்த்தைகள், செயல்பாடுகள், முடிவுகள் போன்றவற்றின் வழியாக எடுத்துரைத்தவர்.

### திருத்தந்தையின் "ஊர்பி எத் ஓர்பி" சிறப்புச்செய்தி

ஒவ்வோர் ஆண்டும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா மற்றும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா என்னும் இரு முக்கிய நாள்களில், திருத்தந்தையர், வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலின் நடுமாடத்திலிருந்து, "ஊருக்கும் உலகிற்கும்" எனப் பொருள்படும் ஊர்பி எத் ஓர்பி (Urbi et Orbi) என்ற சிறப்புச் செய்தி, மற்றும் வாழ்த்துக்களை வழங்கி வருகின்றனர். 13-ஆம் நூற்றாண்டில் திருத்தந்தை பத்தாம்

கிரகோரி அவர்களின் தலைமைப்பணி காலத்தில் தொடங்கப்பட்ட, "ஊர்பி எத் ஓர்பி" சிறப்பு ஆசீர் வழங்கும் பழக்கமானது இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. அதன்படி மக்களுக்கு தனது ஊர்பி எத் ஓர்பி சிறப்புச் செய்தியை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## துன்புறும் உக்ரைன் மக்களுக்காக

உயிர்த்தெழுந்த கிறிஸ்து துன்புறுத்தப்பட்ட உக்ரைனில் உயிர்ப்பின் அமைதியைக் கொடையாகப் பொழிவாராக, உயிர்ப்பின் ஒளி மேற்கு பால்கன், காங்கோ ஜனநாயகக் குடியரசு, சூடான் தென் சூடான், சஹேல், ஆப்பிரிக்காவின் கொம்பு (Horn of Africa) கிரேட் லேக்ஸ் ஆகிய பகுதிகளில் வன்முறை மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைதியையும் ஆறுதலையும் வழங்கட்டும். பிளவுகளை உருவாக்குகின்ற, அரசியல் மற்றும் பொருளாதார விளைவுகளால் நிறைந்த தடைகளை உடைக்கவும், ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ளவும், நல்லிணக்க ஒற்றுமையை அதிகரிக்கவும், ஒவ்வொரு மனிதனின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை வளர்க்கவும் உயிர்ப்பின் ஒளி நம்மைத் தூண்டுகிறது. ஆயுதங்களின் சத்தமும் மரணத்தின் எதிரொலிகளும் இனி கேட்கப்படாத வாழ்க்கையில் பங்கேற்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்ற உறுதியை நம்மில் விதைக்கிறார். "இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" என்று கூறிய உயிர்த்த இயேசுவில் நம்மை ஒப்படைப்போம். அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்! இவ்வாறு திருத்தந்தையின் ஊர்பி எத் ஓர்பி சிறப்புச்செய்தியை பேராயர் ஜொவான்னி தியேகோ ரவெல்லி அவர்கள் எடுத்துரைத்தார்.

## இந்திய அருள்கன்னிகை உட்பட 6 பேர் புனிதர் பட்ட படிகளுக்கு ஏற்பு

விதவையானபின் ஜெப வாழ்விலும் தனிமை வாழ்விலும் தன் நாட்களைச் செலவிட்ட இறையடியார் Eliswa கார்மல் சபையின் காலணி அணியாத பெண்களுக்கான மூன்றாம் சபையை 1862ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இந்திய அருள்சகோதரி ஒருவர் உட்பட, 6 இறையடியார்களின் பெயர்களை புனிதர் பட்ட நிலைகளுக்கான படிகளுக்கென அங்கீகரித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். புனிதர்பட்ட படிநிலைகளுக்கான திருப்பீடத் துறையின் தலைவர் கர்தினால் மார்செல்லோ செமராரோ அவர்கள் திங்களன்று திருத்தந்தையை சந்தித்து இது குறித்த விவரங்களை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, ஆறு இறையடியார்களின் புனிதர்பட்ட நிலைகளுக்கான படிநிலைகளைத் தொடர அங்கீகாரம் வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த இறையடியார் Eliswa அவர்கள், 1831ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதி எர்ணாகுளம் மாவட்டத்திலுள்ள Ochanthuruth என்னுமிடத்தில் நிலச்சுவான்தார் குடும்பத்தில் பிறந்து, தன் 16ஆம் வயதிலேயே Vatharu Vakayil என்பவரை

திருமணம் புரிந்து 1851ஆம் ஆண்டு ஒரு மகளைப் பெற்றபின், அதற்கு அடுத்த ஆண்டே தன் கணவரை இழந்து விதவையானார். ஜெப வாழ்விலும் தனிமை வாழ்விலும் தன் நாட்களைச் செலவிட்ட இவர், இத்தாலி நாட்டு காலணிகள் அணியாத கார்மல் சபை அருள்பணி லியோபோல்தோ பெக்காரோ என்பவரின் ஆன்மீக வழிகாட்டுதலின்படி, கார்மல் சபையின் காலணி அணியாத பெண்களுக்கான மூன்றாம் சபை என்பதை 1862ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இந்தியாவில் பெண்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து 1913ஆம் ஆண்டு இறைவனடிச் சேர்ந்த இறையடியார் எலிஸ்வா அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்த புதுமை ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு இவரை அருளாளராக உயர்த்துவதற்கு வழிகோலியுள்ளது.

பிரேசில் நாட்டின் ஸாவோ பௌலோ நகரில் போதைப்பொருள் கடத்துவோருக்கு எதிராகப் பணியாற்றியதற்காக அவர்களால் 2001ஆம் ஆண்டு கொல்லப்பட்ட இத்தாலிய அருள்பணி Nazareno Lanciotti அவர்களின் மறைசாட்சிய மரணத்தையும் அருளாளர் பட்ட அறிவிப்புக்கென ஏற்று அங்கீகாரம் வழங்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 1852ஆம் ஆண்டு பிறந்த இஸ்பானிய கட்டிடக் கலைஞர் அந்தோனி கௌதி, பர்சலோனாவின் புகழ்வாய்ந்த திருக்குடும்ப பேராலயத்தைக் கட்டும் பணியை எடுத்து நடத்தியவர். 1926ஆம் ஆண்டு சாலை விபத்தில் காயமுற்ற இவர், மருத்துவமனையில் இறுதி அருள்சாதனத்தைப் பெற்றபின், விபத்து நடந்த மூன்றாம் நாள் இறைபதம் சேர்ந்தார். புனிதர் பட்ட நிலைகளுக்கான ஆரம்ப படியான வணக்கத்துக்குரியவராக ஏற்கப்பட்டுள்ளார் இறையடியார் அந்தோனி கௌதி. இது தவிர, கைவிடப்பட்ட குழந்தைகளை பராமரிப்பதற்கென பெண்துறவு சபை ஒன்றை உருவாக்கிய பெல்ஜியம் நாட்டின் அருள்பணி ீநவநச துழளநிா வுசநைளவ, இத்தாலியில் இளையோரிடையே பணியாற்றிய இத்தாலிய அருள்பணி யுபெநடழ டீரபாநவவை, இத்தாலியில் பிறந்து இளையோரை மறைக்கல்வி ஆசிரியர்களாக உருவாக்குவதில் ஆழ்ந்த கவனம் செலுத்திய அருள்பணி யுபழளவைழ ஊழணணழடைழ ஆகியோரும் வணக்கத்துக்குரியவர்களாக ஏற்கப்பட்டுள்ளனர்

## 4. திருப்பீடத் தூதர்களுக்கான பயிற்சியில் திருத்தந்தையின் வழிகாட்டல்

300 ஆண்டுகளுக்கு மேலாக தூதரகப் பணிக்கென அருள்பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி வழங்கிவரும் நிலையில், பாப்பிறைக் கல்விக்கழகத்தின் திட்டத்தில் சில வழிகாட்டல்களை புகுத்தியுள்ளார் திருத்தந்தை. உலகம் முழுவதும் உள்ள திருப்பீட தூ தரகங்களில் பணிபுரியும் திருப்பீட அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவது குறித்த திட்டங்களை புதுப்பித்து சிறு வழிகாட்டல் ஒன்றை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். அரசியல் உறவுகளின் அறிவியல் பற்றி எடுத்துரைக்கும் இந்த புதிய வழிகாட்டுதல் அறிக்கை, சட்டம், வரலாறு, அரசியல், பொருளாதாரம், அனைத்துலக உறவுகளில் பயன்படுத்தப்படும்

மொழிகள் போன்ற துறைகளில் பயிற்சி குறித்தும் எடுத்துரைக்கிறது. திருப்பீடத் தலைமையகம், தலத்திருஅவைகள், திருஅவை நடவடிக்கைகள், கலாச்சாரத்திற்கும் மனித சமூகத்திற்கும் இடையே நிலவும் உறவு, பேச்சுவார்த்தைகளுக்கான பாதையை ஊக்குவித்தல், அமைதி மற்றும் மத விடுதலைக்கு உறுதியளித்தல் போன்றவைகளின் முக்கியத்துவம் குறித்தும் திருத்தந்தை எடுத்தியம்பியுள்ளார். இத்திருப்பீடக் கல்விக் கழகத்தின் திட்டத்தில் திருப்பீடத்தூதர்களுக்கானப் பயிற்சியில் ஓராண்டு முழுவதும் ஆசியா, ஆப்ரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் மறைப்பணி அனுபவத்தை வழங்குவது இணைக்கப்பட வேண்டும் என 2020ஆம் ஆண்டே வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## சுடர் வாசகர் போட்டி - 121

1. புனித மாற்கு
2. புனித இரண்டாம் ஜான்பால்
3. 16 ஆண்டுகள்
4. சியன்னா நகர் புனித கத்ரீன்
5. இயேசு கிறிஸ்து ஒரே ஒருமுறை தம் உடலை பலியாக செலுத்தியதன் மூலம்
6. புனித ஜான் பாப்டிஸ்ட்
7. பவோலா நகர் புனித பிரான்சிஸ்
8. நம் வாழ்வை
9. ஜெமெல்லி
10. அதன் வெளிச்சத்தில் வெளிப்படும்
11. கிறிஸ்துவத்தை ஒழித்து ஐரோப்பாவைக் காப்பாற்ற
12. பவோலா நகர் புனித பிரான்சிஸ்
13. சியன்னா நகர் புனித கத்ரீன்
14. 1716, ஏப்ரல் 23
15. போலந்து அரசன் பொலஸ்லாஸ்

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. A. Dalsirani, Bangalore

Mr. Lourdunathan, Salem

Sr. Fatima, Tricy

## சுடர் வாசகர் போட்டி 122

1. புனித தோமினிக் தமது ஆவியை இறைவனிடம் எந்நாளில் ஒப்படைத்தார்?
2. "உங்களுக்காக நியமிக்கப்படும் ஆன்ம குருவிடம் உங்கள் கை எப்போதும் இருக்கட்டும்" கூறியது யார்?
3. பிலிப்பு யாக்கோபுவின் இறைநம்பிக்கையை எதற்கு ஒப்பிட்டுக் கூறினார்?
4. இறைவனின் திட்டப்படி 12வது திருத்தூதராகத் தேர்வானார் யார்?
5. பொதுத் தேர்தல் நடத்தும்வரை தற்காலிகத் தலைவராக இருக்கும்படி தொன் போஸ்கோ யாரைக் கேட்டுக்கொண்டார்?
6. இறைவல்லமையால் இயலாததைக்கூட இறைவனிடம் பெற்றுத்தரும் வரம் பெற்றவர் யார்?
7. சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலைப் பெற்ற திருத்தந்தை யார்?
8. ஒவ்வொரு சொல்லிற்கும் செயலிற்கும் எது தேவைப்படுகிறது?
9. ஆஸ்விட்ஸ் என்ற இடத்திலிருந்து, டக்காவு என்ற இடத்திலுள்ள சிறைச்சாலைக்கு எத்தனைக் குருக்களை தேர்ந்தெடுத்தார்கள்?
10. விண்ணுலக பாதுகாவலராக 12ம் பத்திநாதர் யாரை நியமித்தார்?
11. 1912ம் ஆண்டு போலந்து நாட்டிலுள்ள க்ராகௌ என்னும் ஊரில் பிறந்தவர் யார்?
12. விவிலிய விடுமுறைப் பள்ளியை எப்பொழுது யார் உலகறியச் செய்தனர்?
13. பர்சலோனாவின் புகழ் வாய்ந்த திருக்குடும்ப பேராலயத்தைக் கட்டும் பணியை செய்தது யார்?
14. புனித வியாகுல அன்னை திருவிழாவை எப்பொழுதுக் கொண்டாடுகின்றனர்?
15. "நீ என்னை அன்பு செய்கிறாயா?" என்று யார் யாரிடம் கேட்டார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 200/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண்: 9385201453

பெயர்: ..................................
முகவரி: ..................................
..................................
..................................
..................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா
புனித போனிப்பாஸ்
புனித நார்பெர்ட்
பெந்தக்கோஸ்து ஞாயிறு பெருவிழா
புனித பர்னபா: திருத்தூதர்
அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள்
தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா
புனித அலோசியுஸ் கொன்சாலா
கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல் திருஇரத்தம் பெருவிழா
புனித ஜோசப் கபாசோ
புனிதத் திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா
இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா
புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம்
புனிதர்கள் பேதுரு, பவுல், திருத்தூதர்கள் பெருவிழா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள் பற்றிய வரலாறு
புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் தரும் செய்தி
இயேசுவின் தூய்மைமிகு இதயம் பற்றிய சிறப்பு நிகழ்வுகள்
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மே 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## மே மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வி | தொழிலாளர் புனித யோசேப்பு | தொ.நூ. 1: 26-2:3 | மத். 13: 54-58 |
| 2 | வெ | புனித அத்தனாசியுஸ் | திப. 5: 34-42 | யோவா. 6: 1-15 |
| 3 | ச | புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு, திருத்தூதர் விழா | 1கொரி. 15: 1-8 | யோவா. 14: 6-14 |
| 4 | **ஞா** | **பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு** | **I.** திப. 27: 32.40-41<br>**II.** திவெ. 5: 11-14 | யோவா. 21: 1-19 |
| 5 | தி | | திப. 6: 8-15 | யோவா. 6: 22-29 |
| 6 | செ | புனித தோமினிக் சாவியோ (சலேசிய புனிதர்) | திப. 7: 51-8:1 | யோவா. 6: 30-35 |
| 7 | பு | | திப. 8: 1-8 | யோவா. 6: 35-40 |
| 8 | வி | | திப. 8: 26-40 | யோவா. 6: 44-51 |
| 9 | வெ | | திப. 9: 1-20 | யோவா. 6: 52-59 |
| 10 | ச | புனித தமியான் அருள்பணியாளர் | திப. 9: 31-42 | யோவா. 6: 60-69 |
| 11 | **ஞா** | **பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு, இறை அழைத்தல் ஞாயிறு** | **I.** திப. 13: 14, 43-52<br>**II.** உரோ. 7: 9,14-17 | யோவா. 10: 27-30 |
| 12 | தி | புனிதர்கள் பங்கிராஸ், நெரேயுஸ், அக்கிலேயுஸ் | திப. 11: 1-18 | யோவா. 10: 1-10 |
| 13 | செ | பாத்திமா நகர்ப் புனித கன்னி மரியா | திப. 11: 19-26 | யோவா. 10: 22-30 |
| 14 | பு | புனித மத்தியா திருத்தூதர் விழா | திப. 1: 15-17, 20-26 | யோவா. 15: 9-17 |
| 15 | வி | | திப. 13: 13-25 | யோவா. 13: 16-20 |
| 16 | வெ | அரு. அலோசியஸ் ஓரியோனே (சலேசிய புனிதர்) | திப. 13: 26-33 | யோவா. 14: 1-6 |
| 17 | ச | | திப. 13: 44-52 | யோவா. 14: 7-14 |
| 18 | **ஞா** | **பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு** | **I.** திப. 14: 21-27<br>**II.** பிலி. 21: 1-5 | யோவா.13: 31-33,34-35 |
| 19 | தி | | திப. 14: 5-18 | யோவா. 14: 21-26 |
| 20 | செ | | திப. 14: 19-28 | யோவா. 14: 27-31 |
| 21 | பு | புனித கிறிஸ்டோபர் மகல்லானஸ் தோழர்கள் | திப. 15: 1-6 | யோவா. 15: 1-8 |
| 22 | வி | காசியா நகர்ப் புனித ரீத்தா | திப. 15: 7-21 | யோவா. 15: 9-11 |
| 23 | வெ | | திப. 15: 22-31 | யோவா. 15: 12-17 |
| 24 | ச | கிறிஸ்தவர்களின் சகாய அன்னை விழா | திப. 16: 1-10 | யோவா. 15: 18-21 |
| 25 | **ஞா** | **பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு** | **I.** திப. 15: 1-2, 22-29<br>**II.** திவெ. 21: 10-14, 22-23 | யோவா. 14: 23-29 |
| 26 | தி | புனித பிலிப்பு நேரி | திப. 16: 11-15 | யோவா. 15: 26-16:4 |
| 27 | செ | காண்டர்பரி நகர்ப் புனித அகுஸ்தின் | திப. 16: 22-34 | யோவா. 16: 12-15 |
| 28 | பு | | திப. 17: 15, 22-18:1 | யோவா. 16: 12-15 |
| 29 | வி | அரு. ஜோசப் கொவால்ஸ்கி (சலேசிய புனிதர்) | திப. 18: 1-8 | யோவா. 16: 16-20 |
| 30 | வெ | | திப. 18: 9-18 | யோவா. 16: 20-23 |
| 31 | ச | புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல் விழா | செப். 3: 14-18 (அ)<br>உரோ.12: 9-16 | லூக். 1: 39-56 |




தீபகம் தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும்
விழுமியக் கல்வி மையம் நடத்தும்
SUPER VBS 2025
போட்டிகளின் விவரங்கள்
மனப்பாடப் போட்டி
ஓவியப் போட்டி
பாட்டுப் போட்டி
மாறுவேடப் போட்டி
SCAN HERE
YOUTUBE LIVE
நேரம்
காலை 9 மணி முதல்
நாள்
07.05.2025, புதன்கிழமை
இடம்
தூய ஆவியார் ஆலயம்,
தாகூர் நகர், புதுச்சேரி.
கட்டணம்
50/-
குழுக்களின் விவரங்கள்
1ஆம் குழு 1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை
2ஆம் குழு 4ஆம் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரை
3ஆம் குழு 7ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை
4ஆம் குழு 10ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை
DEEPAGAM DON BOSCO




தீபகம் நடத்தும்
கலை வழி - இறைமொழி
தீபகக் கலைக்குழுக்கள்
பயிற்சிப் பட்டறை
ஆளுமை வளர்ச்சி - நாடகப் பயிற்சி
கோடை முகாம் - 2025
(Residential Workshop)
2025 மே 1 முதல் 30 வரை
இடம் :
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர் - 635601
வழங்கப்படும் பயிற்சிகள்
மேலும் விபரங்களுக்கு :
+91 9385201453




சிறார்களின்
திருவிருந்துக்கான
மறைக்கல்வி
Catechism for First Holy Communion
TO SHARE THE LIGHT
Catechism for First Holy Communion
சிறார்களின்
உறுதிப்பூசுதலுக்கான
மறைக்கல்வி
Catechism for
Sacrament of
Confirmation
இப்போது
விற்பனையில்

IN PARADISUM DEDUCANT TE ANGELI
Pope Francis
(Jorge Mario Bergoglio)
December 17, 1936 - April 21, 2025
Rest in Peace,
Beloved Shepherd,
Faithful Servant





*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)

*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *அட்டைப்பட வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT

*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக்** *அச்சிட்டோர்* : **சிகா அச்சகம்,** *கீழ்ப்பாக்கம், சென்னை - 10*